2020 - இதழ் 08
இலவசம்

ஆவணி - 2020

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் 2020 - இதழ் 08

**இயேசு சொன்னார்:**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

## கிறேஸ் (ற்)ரபனக்கல்

## வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909

(f)பின்ச் / மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2020 - இதழ் 08


### 4 வெட்கப்பட்டு போவதில்லை

மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார், நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார், அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார், துன்மார்க்கரின் வழியை யோ கவிழ்த்துப்போடுகிறார்

### 6 தனிப்பட்ட வாழ்க்கை

வாழ்நாள் முழுவதும், மற்றவர்களின் ஆதரவில் நாங் கள் வாழ முடியாது. ஒவ்வொரு விசுவாசியும், தனிப்பட ஒரு நல்ல போர்வீரனைப் போல எந்த வேளையிலும் ஆயத்தமுள்ளவனாக இருக்க வேண்டும்.

### 11 பிரசங்கக் குறிப்புகள்

இன்று நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், “திடன் கொள்ளுங்கள்” “பெலன் கொள்ளுங்கள்” “எழுந்திரு ங்கள்” அவர் அன்பு செய்கின்ற தேவன் அவருடைய அன்பு குறைந்து போவதில்லை

### 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 13ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... ஆவணி 1, 2, 3, 9, 16, 17, 24, 25, 26, 27, 28, 29, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... ஆவணி 1, 2, 4, 9, 12, 13, 16, 18, 20, 21, 23, 25, 27, 28

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... ஆவணி 3, 11, 12, 13, 19, 21, 22, 25, 26, 27, 28

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... ஆவணி 4, 5, 8, 11, 12, 13, 14, 15, 17, 18, 19, 20, 21, 22, 23, 25, 28

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... ஆவணி 4, 5, 12, 16, 17, 20, 21, 23, 26, 27

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... ஆவணி 1, 7, 9, 10, 15, 16, 22, 23, 24, 26, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... ஆவணி 1, 7, 8, 11, 12, 14, 15, 25, 29, 30

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... ஆவணி 5, 6, 7, 10, 12, 15, 16, 17, 18, 19, 22, 23, 24, 25, 30

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... ஆவணி 7, 10, 22, 24, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

... ஆவணி 1, 6, 8, 25, 29, 31

**தேவ நீதி வெளிப்படும்**

... ஆவணி 9, 13, 15, 18, 29

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... ஆவணி 9, 11, 16, 23, 24

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... ஆவணி 8, 13, 14, 15, 19, 20, 22, 25, 26, 27, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... ஆவணி 6, 8, 11, 15, 18

# வெட்கப்பட்டு போவதில்லை

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

தாவீது தனது சங்கீதத்திலே "நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை." என்று பாடியுள்ளார்.

ஆம் அவரை நோக்கிப்பார்த்தவர்கள் வெட்கப்பட்டு போகவில்லை மாறாக அவர்கள் முகங்கள் பிரகாசமடைந்தன. சந்தோசத்தால் நிறைந்தார்கள். மேலும் தாவீது

**"இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்."**

என்று தனக்கு தேவன் பதில் அளித்ததை சொல்லி துதிக்கின்றார்.

தேவன் தாம் சொன்னதை நிலைநிறுத்தி நிறைவேற்றுகிறவராயுள்ளார். தேவன் இஸ்ரவேலரை எகிப்த்திலிருந்து விடுதலையாக்கிப் புறப்படபண்ணின போது அவர்கள் செங்கடலருகே வந்தார்கள். எகிப்த்தின் இராஜாவாகிய பார்வோன் தனது சேனைகளோடு அவர்களைத் அழித்துப்போடும்படி பின் தொடர்ந்து நெருங்கி வந்தான். அந்நேரத்தில் இஸ்ரவேலருக்கு முன்பாக இரண்டு காரியங்களிருந்தன.

ஓன்று பார்வோனும் அவனது மிகவும் பெரிதும் கொடிதுமான சேனை. மற்றயது தேவன் அவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம்.

பாலும் தேனும் ஓடுகின்ற தேசமாகிய கானானுக்கு அழைத்து செல்வேன் என்று தேவன் வாக்குப்பண்ணியிருந்தார். வாக்குத்தத்தமானது விசுவசிக்கப்படவேண்டியது. பார்வோனின் சேனையோ கண்முன்னே காணப்படுகின்ற ஓன்று. ஜனங்கள் பார்வோனின் சேனையைக் கண்டு பயந்து அலறினார்கள். மோசேயோ தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கு முன்பாக அந்தப் பெரிதான மனித சேனை தோற்றுப்போனது. செங்கடல் பிளந்து வழிவிட்டது, பார்வோனின் சேனையோ கடலிலே மூழ்கி அழிந்து போனது.

தேவன் அவர்களை வெட்கப்படவிடவில்லை. "அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன், என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்." என்று தேவன் கூறியுள்ளதை பரிசுத்த வேதாகமத்திலே காண்கிறோம்.

## “கர்த்தரின் நாமம் பலத்த துருகம்: நீதிமான் அதற்குள் ஓடிச்சுகமாயிருப்பான்.”

என்பதை பரிசுத்த வோதாகமத்தில் நீதிமொழிகளின் புத்தகத் திலே காண்கிறோம்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டிருந்த வேளை, சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஓருவன் தான் மரணத்துக்கு சமீப மாயிருந்த நேரத்தில் இயேசுவை விசுவாசித்து அறிக்கை செய்தான். கர்த் தராகிய இயேசு அவனை நோக்கி, இன்றே நீ என்னோடு கூட பரதீசிலி ருப்பாய் என்று வாக்குப்பண்ணினார். அந்த மனிதன் அந்தவேளையி லேயே நித்திய நரக ஆக்கினையிலிருந்து விடுதலையாக்கப்பட்டான். அவன் வெட்கப்பட்டுப்போகவில்லை.

## மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார், நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார்.

பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார், அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார், துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப் போடுகிறார்.

‘‘வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.’’ என்று அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் தம் ஜனங்களை வெட்கப்பட்டு போகவிடுவதில்லை.

பிரியமான சகோதரனே சகோதரியே,

வானமும் பூமியும் ஓழிந்து போகும். நாம் காணும் எல்லாம் ஒருநாள் மறைந்து போய்விடும். உன் மீது மனதுருகும் தேவன் நித்தியமானவர். அவர் உன்னை ஆதரிப்பார். அவர் உன்னை வெட்கப்பட்டுப்போக விடுவ தில்லை. அவர்மீது பாரத்தை வைத்துவிடுங்கள். அவர் உங்களை ஆதரி ப்பார்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

## கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# தனிப்பட்ட வாழ்க்கை

தேச மட்டத்திலே அங்கீகாரம் பெற்ற, பட்டணத்திலுள்ள பிரசித்தமான பாடசாலையில் தங்கள் மகனை சேர்க்க வேண்டும் என்பதற்காக மழலை வயதிலிருந்தே அவன் தன் தகமையைப் பெறும் பொருட்டு ஆயத்தப்ப டுத்தினார்கள். நாட்கள் நிறைவேறிய போது, பெற்றோரின் பிரயாசத்தின் பலனாக அவர்களின் மகனுக்கு பிரசித்தி பெற்ற குறித்த பாடசாலையிலே அனுமதி கிடைத்தது. பெற்றோர், உறவினர் மற்றும் அவர்களின் நண் பர்களுக்கும் மிக்க மகிழ்ச்சி. அவர்களுடைய மகன் வளர்ந்து தன் அறி வை அடைந்த போது, ஜனங்கள் மத்தியிலே, அந்த பாடசாலையை குறி த்த நன்மதிப்பை அறிந்து கொண்டான். "எங்கள் மகன் அந்தக் கல்லூ ரியில் படிக்கின்றான்" என்று பெற்றோர்கள் பெருமிதமாக கூறிக் கொள்வா ர்கள். "நான் இந்த கல்லூரியில், அந்த ஆசிரியரிடம் கணிதம் படிக்கின் றேன்" என்று மகன் கூறிக் கொள்வான். அந்த பாடசாலையில் கல்வி கற் பது அவனுக்கு கிடைத்த சிலாக்கியம். விகிதாசார அடிப்படையிலே அந் தக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் அதிக புள்ளிகளை பெற்றுக் கொள்வதால் அந்த கல்லூரியின் சராசரி புள்ளிகள் மிக அதிகமாகவே இருந்தது. ஆனால், குறிப்பிட்ட இந்த மாணவன் தன் பாடங்களிலே சித்தி பெற வேண்டுமாயின், கல்லூரியின் சாரசரி புள்ளியைக் குறித்தும், கல்லூரியின் பெயரைக் குறித்தும், அதிலே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க ளைக் குறித்தும் பெருமிதமாக பேசுவதில் பிரயோஜனம் இல்லை. கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களை சரியான முறையில் கிரகிக்க வேண்டும். பின்பு தன் வீட்டிலே நாளாந்தம் கொடுக்கும் பாடங்களை சீராக கற்க வேண்டும். ஆசிரியர்கள் கொடுக்கும் வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்து முடிக்க வேண்டும். ஒருவேளை ஆசிரியர்கள் கொடுக்கும் வீட்டு வேலைகளை தனிப்படச் செய்யாமல், மற்றய மாணவர்களிடமிருந்து உத வியைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது குழுவாகச் சேர்ந்து ஒப்படை களை செய்து முடிக்கலாம். ஆனால், பரீட்சையின் நாள் ஒன்று உண்டு. அந்த நாளிலே அவன் தன் பரீட்சையை தனித்தவனாக முகங் கொடுக்க வேண்டும். முன்னேற வேண்டுமாயின், பரீட்சையின் நாளிலே தனிப்பட எதிர்நோக்கி அதை மேற் கொள்ள வேண்டும்.

ஒரு ராஜ்யத்தின் சிறப்புப் பட்டாளத்திலே பல படைவீரர்கள் சேர்க்கப்ப ட்டிருந்தாலும், ஒவ்வொரு போர்வீரனும் தன் தன் நாளாந்த பயிற்சியை குறித்து கவனமற்றவனாக இருந்துவிட முடியாது. படையாக போர்க்கள த்திற்குச் சென்றாலும், எதிராளியானவனை தனிப்பட எதிர்த்து போர் புரிய வேண்டும். ஒருவன் தன் நாளாந்த பயிற்சிகளில் கவனமற்றிருந்தால், அவன் எதிரிகளை மேற் கொள்ள முடியாதவனாய் தோற்றுப் போய்விடு வான்.

மனிதர்கள் தேசமாக, பட்டணமாக, சமூகமாக, குடும்பமாக, குழுக்களாக சேர்ந்து வாழ்கின்றார்கள். அப்படி வாழ்ந்தாலும் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ் நாட்களிலே பல தடவைகள் தனிமைப்படுத்தப்படுகின்றான். அந்த வேளைகளிலே, மற்றவர்களின் ஆதரவுகள் எதுவுமின்றி தன் வாழ்வில் தீர்மானங்களை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு போகின்றான். அந்த வேளைகளிலே அவன் தன் வாழ்வில் எடுக்கும் தீர்மானங்கள் அவ னுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ மாறிவிடலாம்.

இந்த நிலைமைக்கு எந்த மனிதனும் விதிவிலக்கானவன் அல்ல. அந்த நேரத்திற்கு ஒரு மனிதன் தள்ளப்படும் போது, அவன் ஆயத்தமற்றவனாக இருப்பானாகில், அவன் தன் வாழ்வில் பெரும் பாதகமான பின்னடைவு களை சந்திக்க நேரிடும்.

புதிதாக திருமணம் செய்த ஒரு இளம் தம்பதிகள் தங்கள் முதலாவது பிள்ளையை எதிர்பார்த்திருந்தார்கள். கருவிலே பிள்ளை உற்பவித்த நாள் முதற்கொண்டு, அதன் தாயாரும் தந்தையாரும் பரவசத்துடன் அதிக கவ னத்தை செலுத்தி வந்தார்கள். பிள்ளை பிறந்த நாள் முதற் கொண்டு தங்கள் பெலத்தின்படி அந்த பிள்ளைக்கு உச்சிதமானவைகளை கொடு த்து வந்தார்கள். வீட்டிலே அந்த பிள்ளை பாதுகாப்பாகவும் ஆரோக்கிய மாகவும் இருப்பதற்கு வேண்டிய யாவற்றையும் ஒழுங்கு செய்து கொடு த்து வந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்று, அந்த பிள்ளை பாடசா லைக்கு செல்லும் போது, அந்த பாடசாலையிலே இருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளில் இந்தப் பிள்ளையும் ஒன்றாக இருக்கும். அந்த பிள்ளை ஆசிரியருடனும், பல மாணவர்களுடனும் சேர்ந்திருந்தாலும், தன் சொந்தத்தில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் உண்டு. பாடசாலையிலே நடத்தப்படும் பரீட்சைகளை தன் சொந்தத்தில் தனியாக செய்யும் நேரம் உண்டு. சக மாணவர்களினால் உண்டாகும் அசௌகரியங்களை தனித்து முகங்கொடுக்க வேண்டிய நேரங்கள் உண்டு. இப்படியாக அந்த பிள்ளை யானது வளர்ந்து வரும்போது, அந்தப் பிள்ளைக்கு பலர் ஆதரவாக, அவன் பெற்றோர், உறவுகள், நண்பர்கள் என்று பலர் இருந்தாலும் அவன் தனித்து முகங்கொடுக்க வேண்டிய நேரத்திற்கு எப்போதும் ஆய த்தமுள்ளவனாகவே இருக்க வேண்டும்.

இவ்வண்ணமாகவே, கொஞ்சக் காலம் இந்தப் பூமியிலே பரலோக யாத் திரிகளாக கடந்து செல்லும் எமக்கு, இந்த உலகத்தின் போக்கை மேற் கொள்ளும்படிக்கு, தேவனாகிய கர்த்தர் தாமே ஈவாக பல வரங்களைக் கொடுத்திருக்கின்றார். எங்களோடு இருந்து, சகல சத்தியங்களிலும் எங் களை வழிநடத்தும் படிக்கும் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை எங்க ளுக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். நாங்கள் ஒருவருக்கொருவர் பக்திவி ருத்தியை ஏற்படுத்தும்படி பூமியிலே சபையை ஏற்படுத்தினார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர் ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ் துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தி னார். (எபேசியர் 4:11-13). தேவனானவர் சபையிலே முதலாவது அப்போ ஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்க ளையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படு த்தினார். (1 கொரிந்தியர் 12:1-31). பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக் குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடும்படிக்கு மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நமக்கு திருஷ்டாந்தங்களாக தந்திருக்கின்

றார். (எபிரெயர் 12:1) இப்படியாக தம்முடைய குமாரனாகிய இயேசுவோடுகூட எல்லா நன்மைகளையும் எங்களுக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார். (ரோமர் 8:32)

சபையோடு சேர்ந்து சபையாக வாழ்ந்தாலும், நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே எங்கள் வாழ்வில் தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்க ளாக இருக்கின்றோம். தனித்தனியே எதிராளியானவனை எதிர்த்துப் போர் செய்யவேண்டும். அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும் முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை. (லூக்கா 6:44). தோப்பிலே பல மரங்கள் செழித்து வளர்ந்திருந்தாலும், ஒவ்வொரு மரமும், தோப்பிலே இருக்கும் மற்ற மரத்தின் கனிகளினால் அல்ல, அந்தந்த மரம் கொடுக்கும் கனிகளால் அறியப்படும்.

எனக்கு ஒரு நல்ல போதகரை ஆண்டவர் கொடுத்திருக்கின்றார். நல்ல சபையையும், கரிசனை நிறைந்த சக விசுவாசிகளையும் கொடுத்திருக்கின்றார். காரியம் அப்படியாக இருந்தால், அவை யாவும் தேவனுடைய ஈவு. ஆனால், வாழ்நாள் முழுவதும், மற்றவர்களின் ஆதரவில் நாங்கள் வாழ முடியாது. ஒவ்வொரு விசுவாசியும், தனிப்பட ஒரு நல்ல போர் வீரனைப் போல எந்த வேளையிலும் ஆயத்தமுள்ளவனாக இருக்க வேண்டும்.

சபை கூடிவருதல் தேவன் எமக்கு கொடுத்த ஈவு. சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். (எபிரெயர் 10:24-25). மனிதர்கள் கூடி வாழும் இடங்களிலே வேற்றுமைகள் ஏற்படுவதுண்டு. குடும்ப வாழ்க்கையில், வேலை செய்யும் இடங்களில், கல்வி நிலையங்களில், சபைகளில் மனிதர்கள் மத்தியிலே வேற்றுமைகள் ஏற்படுவதுண்டு. அந்த வேளைகளிலே நாம் எடுக்கும் நடவடிக்கைகள் நாம் யார் என்பதை எமக்கு வெளிப்படுத்தும். தனித்தனியே கிறிஸ்துவுக்குள் கனி கொடுக்கின்றவர்கள் குழப்பமான வேளைகளிலே தம் நற்கனிகளை வெளிக்காட்டுவார்கள். ஆனால், நான் இந்த சபையின் அங்கத்தவர், அந்த பிரபல்யமான போதகர் செல்லும் சபைக்கு செல்கின்றேன் என்று கூறி, தம் வாழ்க்கையில், கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட வளர்ச்சியை காண்பிக்காமல், மற்றவர்களோடு சேர்ந்து நாம் கிறிஸ்தவர்கள், நாம் இந்தக் குடும்பத்தை சேர்ந்தவர்கள், என்று பன்மையிலே வாழ்பவர்கள் சோதனையின் காலத்திலே இடறிப் போய்விடுவார்கள்.

கிறிஸ்துவுக்குள் நல்ல போர்ச்சேவகனாய் வாழும்படிக்கு நாங்கள் அழைப்பைப் பெற்றிருக்கின்றோம். எனவே ஒவ்வொரு விசுவாசிக்கும் தனிப்பட்ட பயிற்சியும் வளர்ச்சியும் இன்றியமையாதது.

அந்த தனிப்பட்ட வளர்ச்சியின் அடிப்படை அம்சங்கள் என்ன?

1. நாளாந்தம் வேதத்தை வாசித்து தியானம் செய்தல்,
2. தினமும் தனித்திருந்து ஜெபம் செய்தல்

இவைகளுக்கு மாற்றீடாக எதையும் செய்ய முடியாது.

இன்றைய நாட்களிலே இன்ரநெற் ஊடகங்கள் வழியாக தேவனை கனப்படுத்தும் பாடல்களையும், வேதாகமத்தை மையமாக கொண்ட வேதப் படிப்புக்களையும், ஆராதனைகளையும் பார்க்கின்றோம். இவைக ளால் நன்மைகள் உண்டாகலாம். ஆனால் அவை நீங்கள் தனித்திருந்து வேதத்தை வாசிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் மாற்றீடானவைகள் அல்ல.

ஒரு போர்ச் சேவகன் எவ்வளவு தைரியமுள்ளவனாக இருந்தாலும், தன் படைத்தலைவனோடு இருக்கும் தொடர்பை (Communication) துண்டித்து விடும் போது, அந்தந்த யுத்தங்களுக்குரிய ஆலோசனைகளையும், திட்டங்களையும், செயல்முறைகளையும் அறிந்து கொள்ள மாட்டான். அதனால் அவன் தனக்கும் தான் இருக்கும் பட்டாளத்திற்கும் பெரும் பாதகத்தை ஏற்படுத்தி விடுவான்.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைக ளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன் அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. (யோவான் 10: 27-28)

நல்ல போர்ச் சேவகனாய் அழைப்பைபெற்ற நாம் எங்கள் படைத்தலை வராகிய இயேசுவோடு தனிப்பட இணைக்கப்பட்டிருக்கின்றோம். இயேசு சொன்னார்: என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திரு ப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானா ய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திரா விட் டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய க்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்ட வைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்து போம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திரு ந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்ய ப்படும்.

நாட்கள் கொடியதாக மாறிக் கொண்டிருக்கின்றது. மனிதர்கள் தனித்து விடப்படும் நேரங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. எனவே எங்கள் படைத்தலைவராகிய இயேசுவோடுள்ள உறவிலே ஆழமாக இணைந்து கொள்ளுங்கள். சபையாக சேர்ந்து ஜெபிப்பதும், சிறு குழுக்களாக சேர் ந்து ஆராதிப்பதும், குடும்பமாக வேண்டுதல் செய்வதும் நல்லது. அவை களை விட்டுவிடாதிருங்கள். ஆனால் அவை ஏதும் நீங்கள் தனித்திருந்து வேதத்தை வாசித்து, ஜெபிப்பதற்கு மாற்றீடானவைகள் அல்லவே.

தனித்திருந்து வேதத்தை வாசிப்பதும், தனித்திருந்து ஜெபிப்பதும் உங்கள் வாழ்க்கையில் இன்று இல்லாதிருக்குமாயின், நீங்கள் எதிரியின் கண் ணியில் இலகுவாக மாட்டிக் கொள்வதற்கு உங்களை அர்ப்பணிக்கின்ற வர்களாக இருப்பீர்கள். நீங்கள் சோர்ந்து போகும் வேளையில், உங் களுக்காக பலர் வேண்டுதல் செய்வார்கள். உங்கள் பெலவீன நேரங்க

ளில், நீங்கள் முற்றாக பின்வாங்கிப் போகாதபடிக்கு மற்றவர்கள் பொறுமையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். எங்கள் கர்த்தராகிய இயேசு நீடிய பொறுமையுள்ளவராக எங்களுக்காய் பரிந்து பேசுகின்றார். இவை யாவும் தேவனுடைய கிருபை. ஆனால் கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கின் றது. அவர் நினையாத நாளிலே வருவார்.

பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொ ண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்க மடைந்து தூங்கிவிட்டார்கள்.

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களு க்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற்குப் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார் ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள் கதவும் அடைக்கப்பட்டது. (மத்தேயு 25:1-12)

எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவினால் கூறப்பட்ட இந்த உவமையின்படி நாங்கள் ஒவ்வொருவரும் புத்தியுள்ள கன்னிகைகளைப் போல வாழவேண்டும். நாங்கள் புத்தியில்லாத கன்னிகைகளைப் போல வாழ்வோமென்றால், கர்த்தருடைய நாள் வரும்போது, அந்த நாழிகையிலே சபையின் போதகரோ, சக விசுவாசிகளோ எவருமே உதவி செய்ய முடியாது. எனவே, “மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்”. (மத்தேயு 25:13)

இந்த பூமியிலே வெற்றி வாழ்க்கை வாழும்படிக்கு தினமும் வேதத்தை வாசித்து, தியானித்து ஜெபம் செய்யுங்கள். இதற்கு மாற்றீடான வழிகளில்லை. இன்றே ஆரம்பியுங்கள்.

**இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவன், உங்களை வழிநடத்திச் செல்வாராக! ஆமேன்!**

# திடன் கொள்ளுங்கள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - லூக்கா 24:25

எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்து மரண பாதாளத்தை ஜெயித்த வரா யிருக்கின்றார். எனவே திடன் கொள்ளுங்கள்!

இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்த அன்றையத்தினமே சீஷர்களின் இரண்டு பேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என் னும் கிராமத்துக்குப் போனார்கள். அவர்கள் துக்கமுகமுள்ளவர்களாய் இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் குறித்து சம்பாஷித்துக் கொண்டு போகையில் உயிர்தெழுந்த இயேசுவும் அவர்களோடு சேர்ந்து கொண்டார். ஆனாலும், அவர் இயேசு கிறிஸ்து என்று அவர்கள் அறி யாதிருந்தார்கள். அவர்கள் இயேசுவை நோக்கி: இயேசு தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கி லும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசா ரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவை யில் அறைந்தார்கள். அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங் கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது. என்று துக்கப்பட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதய முள்ளவர்களே என்று நிறைவேற வேண்டிய வேத வாக்கியங்களை கூறி அவர்களை திடப்படுத்தினார்.

ஆம், எங்கள் மீட்பர் மரண பாதாளத்தை ஜெயித்தவராயிருக்கின்றார். எனவே திடன் கொள்ளுங்கள்! "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று இயேசு கூறியிருக்கின்றார்.

எலியா என்ற தேவ மனிதன், அவனுடைய நாட்களிலே இஸ்ரவேலிலே பிரபல்யமான தீர்க்கதரிசியாக திகழ்ந்தவன். தேவனுடைய வல்லமையால் நிறைந்தவனாய், பெரும் அதிசயங்களை செய்தவன். தனியொருவனாய் தேவனுடைய வார்த்தையை கூறும்படிக்கு எழுந்து நின்றவன். ஆனால், ஒரு நாள் அவனுடைய மனதிலே பயம் பற்றிக் கொண்டது. தன்னை கொன்று போடுவார்கள் என்ற பயத்தினாலே தன் தேசத்தைவிட்டு ஓடிச் சென்றான். பல நாட்களாய் ஓடி ஓரேப் என்னும் மலையிலே, அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான் இதோ, கர்த்தருடைய வார் த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார். அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தரு க்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன் இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள் உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோ

ட்டார்கள், நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன் என் பிராண னையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான். கர்த்தர் அவனை நோக்கி: , பாகால் என்னும் அந்நிய விக்கிரகத்திற்கு முடங்காதிருக்கிற முழங்கால்க ளையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயி ரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்று தன்னுடைய தாசனாகிய எலியாவை திடப்படுத்தினார். அவன் செய்ய வேண்டிய காரி யத்தையும் அவனுக்கு கூறினார்.

ஒரு சமயம், ஜெபஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, இயேசுவை கண்டவுடனே, அவர் பாதத்திலே விழுந்து: என் குமா ரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும் படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். அவர் அவ னோடேகூடப் போனார். திரளான ஜனங்கள் அவரை சுற்றியிருந்தார்கள். அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவை களையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது, இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவரு டைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.

தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடு ங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவரு க்குச் சொன்னாள். அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்று அவளைத் திடப்படுத்தினார்.

அந்த ஸ்திரி, நான் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொடுவேன் என்று தன் இருதயத்திலே தீர்மானம் செய்தவளாய் இயேசு அண்டை வந்தாள். சுகம் பெற்றுக் கொண்டாள். இன்று நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது “திடன் கொள்ளுங்கள்” “பெலன் கொள்ளுங்கள்” “எழுந்திருங்கள்” அவர் அன்பு செய்கின்ற தேவன் அவருடைய அன்பு குறைந்து போவதில்லை. எனவே விசுவாசத்தோடு அவரைக் கிட்டிச் சேருங்கள். திடன் கொள்ளுங்கள்!

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# நிலையானதைப் பற்றியிருக்கின்றோம்

உலகத்தில் உண்டாகும் சூழ்நிலைகளினால் மனிதர்கள் தடுமாற்றமடைந்து போகின்றார்கள். மனிதர்கள் என்று கூறும் போது, சாதாரண குடிமக்கள் மாத்திரமல்ல, இந்த உலகத்திலே மேன் மக்கள், கல்விமான்கள், உயர்ந்தவர்கள், தலைவர்கள், பெலமுள்ளவர்கள், ஐசுவரியவான்கள், அந்தஸ்துள்ளவர்கள் யாவருமே நம்பிக்கை இழந்து, நிலை தளர்ந்து போய்விடுகின்றார்கள். ஏனெனில் அவர்களின் நம்பிக்கை இந்த உலகத்தினால் உண்டானவைகள் மேல் இருக்கின்றது. ஆனால் எங்களுடைய நம்பிக்கை மனிதர்கள் மேலோ அல்லது மனிதர்களினால் உண்டான மேன்மையின் மேலோ இல்லை. இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. எங்கள் நம்பிக்கை நிலையானது. அந்த நம்பிக்கை சர்வத்தையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன் மேல் உள்ளது. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். இந்த உலகத்தில் நடப்பவைகளால், இந்த உலகம் எவ்வளவு அநித்தியமானது என்பதையும், இது நாங்கள் நிரந்தரமாக தாபரிக்கும் ஊர் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம். எனவே நாங்கள், நாம் தாபரிக்கும் நிலையான நகரமாகிய பரலோகத்தை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

**2 கொரிந்தியர் 4:16**

**ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

**ஜெபம்**: நித்தியமான தேவனே, கடந்து போகும் இந்த உலகத்தின் மேல் என் கண்களை பதிய வைக்காமல், நித்தியராகிய உம்மை நம்பி, அழியாத நித்திய நகரத்தை நோக்கி முன்னேற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஆவணி 2 | 📖 மாலை வாசகம் – யோவான் 3:16

# நிலையற்ற வாழ்வில் நிலையான அன்பு

ஒரு குழந்தையானது பிறந்த நாளிலிருந்து தன் தாயைப் பற்றிக் கொண்டிருக்கும். அதுபோல பெற்றோரும் புதிதாக பிறந்த தங்கள் குழந்தையை நேசித்து, கண்மணி போல பாதுகாக்கின்றார்கள். தங்கள் பெற்றோரே தங்களுக்கு எல்லாம் என்றிருந்த பிள்ளைகள், அவர்களுடைய நாட்கள் வரும் போது, தாய் தந்தையரைக் குறித்த அன்பு அவர்களிடம் இருந்தாலும், கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் பற்றிக் கொள்கின்றார்கள். சில ஆண்டுகளிலே அவர்கள் இருவரும் தங்கள் குழந்தைகளை முதன்மைப்படுத்துகின்றார்கள். பெற்றோராக இருந்தவர்கள் தங்கள் முதிர்வயதை அடைந்து, தங்கள் பேரப்பிள்ளைகள் மேலே தங்கள் பாசத்தை பொழிகின்றார்கள். பிறந்த நாளிலிருந்து இந்த உலகத்தை கடந்து செல்லும் நாள்வரைக்கும் ஒவ்வொருவருடைய நாட்டமும் நம்பிக்கையும் மாறிக் கொண்டே போகின்றது.இப்படியாக மனிதர்களுடைய வாழ்க்கைவட்டம் அமைந்திருக்கின்றது. இதற்கு எவருமே விதிவிலக்கான வர்கள் அல்ல. ஆனால் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் கடந்து செல்லும் போது, மனிதன் நம்பியிருந்த காரியம் நம்பிக்கையற்றதாக மாறிவிடுகின்றது. அதாவது, பிள்ளைகள் பெற்றோருக்கு நம்பிக்கை துரோகம் செய்கின்றார்கள் அல்லது பெற்றோர் தம் பிள்ளைகளை முற்றாக கைவிட்டுவிட்டார்கள் என்பது பொருள் அல்ல. மாறாக இந்த உலகத்திலே எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு. சில வேளைகளிலே நாங்கள் முழு மனதோடு எங்கள் பெற்றோருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று விரும்பினாலும் பிள்ளைகளுடைய பெலனானது பல கார ணங்களால் மட்டுப்படுத்தப் படுகின்றது. அதே போல, எல்லா சூழ்நிலைகளிலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பாதுகாக்க முடியாத சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இந்த நிலையைக் குறித்து துக்கமடையாமலும், பெற்றோரை குறித்த கசப்பு பிள்ளைகளின் மனதில் ஒட்டிக் கொள்ளாமலும், பிள்ளைகளை குறித்த கசப்பு பெற்றோர் மனதிலே ஒட்டிக் கொள்ளாமலும், நிலையற்ற மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், நிலையான அன்பு, "இயேசுவின் அன்பு" என்பதை நல் மனதுடன் நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ரோமர் 8:39**

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறி ஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

**ஜெபம்**: அன்புள்ள தேவனே, மனிதர்களுடைய அன்பு அவர்க ளுடைய பெலனுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதை உணர்ந்து இயேசுவை பற்றிக் கொண்டு வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# காருண்யமுள்ள கர்த்தர்

ஒரு மனிதனானவன் பல குற்றங்களைச் செய்து வந்ததால் சமுதாயத்தாலும், தன் சொந்த குடும்பத்தாலும் தள்ளிவிடப்பட்டிருந்தான். பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் அவனுடைய தாயாரோ, அவனை சந்திக்கும் போதெல்லாம், மகனே, சுகமாய் இருக்கின்றாயா? சாப்பிட்டாயா? என்று அவனை விசாரித்து அவனுக்கு ஆகாரம் கொடுப்பாள். தான் தெரிந்து கொண்ட வழிகளினால் பல துன்பங்களை அனுபவித்த மனிதன், பல ஆண்டுகள் சென்ற பின்பு, தன் தாயாரின் அன்பை நினைத்து மனம் உடைந்து போனான். அம்மா, ஊர் முழுவதும் என்னை பகைக்கும் போது, நீ என்னை குறித்து இன்னும் ஏன் கரிசனையாக இருக் கின்றாய் என்று தன் தாயாரிடம் கேட்டான். மகனே, நீ உயிரோடிருக்கும் வரைக்கும் உன்னைக் குறித்த நன்மையான முடிவையே நான் விரும்புகின்றேன் என்று தாயார் மறுமொழியாக கூறினார். “என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள் ஜீவ தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள் தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்.” கர்த்தர் இல்லாத வாழ்வு வறண்ட நிலம். கனியற்ற வாழ்க்கை. அதனால் அவர்கள் பாழ்கடிப்பும், அழிவுகளையும் தெரிந்து கொண்டார்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வழியிலே நடத்திக்கொண்டு போகுங்காலத்தில், நீ அவரை விட்டுப்போகிறதினால் அல்லவோ உனக்கு இதை நேரிடப்பண்ணினாய் என்று எரேமியா தீர்கதரிசியின் நாட்களிலே, தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களைக் குறித்து கூறினார். தேவனானவர் அவர்களை முற்றாகத் தள்ளிவிடவில்லை. அவர்களை மறுபடியும் தம்மிடம் சேர்த்துக் கொண்டார். நாங்கள் சேவிக்கின்ற தேவன் தம்முடைய ஜனங்களின் அழிவைக் காண ஒரு போதும் விரும்புவதில்லை. நித்திய சமாதானத்தின் வாழ்வுக்கென்றே அவர் எங்களையும் அழைத்திருக்கின்றார். அவர் எங்கள் மேல் வைத்த ஸ்நேகம் அரை வழியில் ஆரம்பித்ததல்ல. அநாதி ஸ்நேகத்தால் எங்களை நேசிக்கின்ற தேவன், தாயின் கருவினிலே எங்களை முன்குறித்தவராயிருக்கின்றார். நாங்கள் வழி தவறிச் செல்லும் போது அவருடைய காருண்யத்தினால் மறுபடியும் இழுத்துக் கொள்கின்றார். எனவே இனி எனக்கு வாழ்வு இல்லை என்று பின்னிட்டு சோர்ந்து போகாமல், சீக்கிரமாக அன்புள்ள தேவனிடத்தில் திரும்புங்கள்.

**எரேமியா 31:3**

**ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன் ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்.**

**ஜெபம்**: காருண்யம் நிறைந்த தேவனே, வாழ்வின் பின்னடைவுகளைக் கண்டு நான் சோர்ந்து போய்விடாதபடிக்கு, உம் அன்பின் ஆழத்தை உணர்ந்து உம்மண்டை சேர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏற்ற சமயத்தில்

தன் நண்பர்களுடன் உதை பந்தாட்டத்தை முடித்துவிட்டு வீடு திரும்பிய மகனின் காலிலே ஏற்பட்டிருக்கும் சிறு காயத்தை கண்ட தகப்பனார், அயலிலுள்ள வைத்தியரிடம் சென்று காயத்திற்குரிய மருந்தை பெற்றுக் கொள்ளும்படி கூறினார். "அப்பா, இப்படியாக முன்பு பல காயங்கள் ஏற்பட்டிருக்கின்றது, சில நாட்களில் இதுவும் காய்ந் துவிடும்" என்று மகனானவன் தன் தகப்பனுக்கு மறு உத்தரவு கூறினான். இது சிறு காயந்தான், ஆனால் அது ஏற்பட்டிருக் கும் இடம் நல்லதல்ல எனவே தாம திக்காமல் வைத்தியரிடம் செல்லும்படி தகப்பன் வலியுறுத்தினார். வாலிப பிர யாத்திலிருந்த மகன், தகப்பனைத் திரு ப்த்திப்படுத்தும்படி, நான் நாளை போகி ன்றேன் என்று கூறிச் சென்றுவிட்டான். ஆனால் அவன் வைத்தியரிடம் செல்ல வில்லை. சில நாட்கள் கடந்ததும் அந்த புதுக் காயமானது, மனைந்து பழைய புண்ணாக மாறியதால், தாங்கமுடியாத வலி ஏற்பட்டது. அத்துடன் காய்ச்சலும் அதிகரித்தது. இரவோடு இரவாக அவசர சிகிச்சை நிலையத்திற்கு சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு அவன் தள்ளப்பட்டான். பல நாட்களாக வீட்டிலே தரித்திருந்து, குறித்த மருந்துளை எடுத்து வந் தான். பல தடவைகள் வைத்தியரை சந்திக்கும்படி சென்று வந்தான். ஏன் இந்த நிலைமை? தந்தையின் ஆலோசனையைக் கேட்டு, அவன் அயலிலுள்ள வைத்தியரை ஏற்ற சமயத்தில் சந்தித்திருந்தால் அவன் இவ்வளவாய் துன்பப்படத் தேவையில்லை. பிரியமானவர்களே, ஆகையால், தங்கள் மனக் கடினத்தினால், தேவனுடைய ஆலோசனைக்குச் செவிகொடுக்காமல், கீழ்ப்படியாமையினாலே தேவன் நிச்சயித்திருந்த இளைப்பாறுதலிலே பிரவேசிக்காமல் அழிந்து போன முன்னோர்களைப் போல வாழாமல், மிகவும் ஜாக்கிரதையுள் ளவர்களாக வாழ்ந்து, தேவ இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். ஏனெனில், நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிரு க்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். காலத்தை தாமதிக்காமல் அவரையே பின்பற்றிச் செல் லுங்கள்.

**எபிரெயர் 4:16**

**ஆதலால், நாம் இரக்கத் தைப் பெறவும், ஏற்ற சம யத்தில் சகாயஞ்செய்யு ங்கிருபையை அடைய வும், தைரியமாய்க் கிரு பாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.**

**ஜெபம்:** கிருபையுள்ள ஆண்டவரே, உம்முடைய கிருபையின் நாட்களை வீணாக்காதபடிக்கு, ஏற்ற சமயத்தில் உம்முடைய ஆலோசனையின் வழியில் நடந்து முன்னேற ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழக்கமான வாழ்க்கை

ஒரு தேசத்தை அரசாண்ட ராஜா, முன்குறிக்கப்பட்ட தினங்களிலே தன் ராஜ்யத்திலிருக்கும் ஊர்களுக்கு தன் தூதுவர்களை அனுப்புவது வழக் கமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட ஊருக்கு தூதுவர்கள் வருகை தரும் போது, அந்த ஊரிலே சில நாட்கள் தங்கியிருந்து, அந்த ஊரின் விவகாரங்களைக் குறித்து ஆராய்ந்தறிந்து, ராஜாவிற்கு தங்கள் அறிக்கையை சமர்ப்பிப்பார்கள். அத னால், எந்த ஊருக்கு ராஜாவின் தூது வர்கள் போகின்றார்களோ, அந்த ஊரி லுள்ள பலர் குறிப்பிட்ட தினத்திற்கு முன் னதாகவே தங்கள் வாழ்க்கை முறை யை மாற்றிவிடுவார்கள். தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் நீதிமான்க ளாகவும், தங்கள் வீடு வாசல்களை யும் சுத்தம் செய்து செம்மையாகவும் வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட நாட்க ளுக்கு எவருமே மதுபானம் அருந்துவதையும், புகைப்பிடிப்பதையும் தவிர்த்துக் கொள்வார்கள். ஏனெனில், ராஜாவின் ஆதரவை தங்கள் ஊர் பெற வேண்டுமாயின் தங்கள் நடவடிக்கைகள் யாவும் ராஜாவுக்கு உகந்ததாக காணப்பட வேண்டும். ராஜாவின் தூதுவர்கள் குறிப்பிட்ட ஊரைவிட்டு சென்று விடுகின்ற சில நாட்களில் அவர்கள் மறுபடியும் தங்கள் வழக்கமான வாழ்க்கைக்கு திரும்பி விடுவார்கள். இப்படிப்பட்ட வர்கள் தாங்கள் விரும்பும் காரியம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக தங்கள் வாழ்க்கை முறைமைகள் செம்மையானது என காண்பித்துக் கொள்கின்றார்கள். இவ்வண்ணமாகவே, இன்று பல மனி தர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு தங்களை பக்தியுள்ளவர்கள் என்று காண்பித்துக் கொள் ளும்படிக்கு, தங்கள் வாழ்க்கை முறைமைகளை மாற்றிக் கொள்கின் றார்கள். நாட்கள் நிறைவேறியதும் தங்கள் வழமையான பிரமாணிக்கம ற்ற வாழ்க்கை முறைக்குச் சென்றுவிடுகின்றார்கள். உம்முடைய ஆவி க்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர் என்று சங்கீதப் புத்தகத்திலே வாசிக்கின்றோம். நாட்களுக்கு தக்கதாக எங்கள் வேஷத்தை மாற்றுவதால் வரும் பலன் அற்பமே. எப்போதும் தேவனு க்கு பிரியமாக வாழ்வதே எங்கள் வழக்கமான வாழ்க்கையாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 139:2**

**என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலை யும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூர த்திலிருந்து அறிகிறீர்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், எப்போதும் உமக்கு பிரியமுள்ள வாழ்க்கையை வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தின் வேண்டுதல்கள்

கடந்த சில மாதங்களாக, கிழமைக்கு ஒரு தடவை உபவாசம் இருந்தேன். தவறாமல் ஞாயிறு தோறும் ஆலயத்திற்குச் சென்று வந்தேன். ஏழை எளியவர்களுக்கு அன்னதானங்களை வழங்கினேன். காணிக்கைகளை ஒழுங்காகக் கொடுத்தேன். ஆனால் ஆண்டவர் என் விண்ணப்பத்தைக் கேட்கவில்லை என்று ஒரு மனிதன் சலிப்படைந்து, தான் செய்து வந்த கிரியைகளை நிறுத்தி விட்டான். அதாவது, தான் விரும்பும் நேரத்திலே, இக் கிரியைகளை செய்யும் போது, தன்னுடைய விண்ணப்பம் எதுவாக இருந்தாலும் அதை ஆண்டவர் கேட்க வேண்டும் என்பதே அந்த மனிதனுடைய எண்ணமாக இருந்தது. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." விலைமதிக்க முடியாத இரட்சிப்பு தேவ கிருபையினாலே எங்களுக்கு ஈவாக அளிக்கப்பட்டிருக்க, நாங்கள் மறுபடியும் எங்கள் சொந்த கிரியைகளினாலே தேவனை பிரியப்படுத்தக் கூடுமோ? எங்கள் இருதயத்தை தேவனுக்கு அர்ப்பணிப்பதாலேயே நாங்கள் தேவனை பிரியப்படுத்த முடியும். அர்ப்பணிப்பற்ற இருதயம் பண்பட்ட நிலம் அல்லவே. அங்கே தேவனுடைய வார்த்தை நிலைத்திருக்காது. தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இருதயம் பண்பட்ட நிலம், அங்கே தேவனுடைய வார்த்தை பெரும் பலனை உண்டு பண்ணும். அப்படிப்பட்ட இருதயத்திலிருந்து வரும் நற்கிரியைகளிலே தேவன் பிரியமாக இருப்பார். அப்பொழுது எங்கள் உபவாசமும், ஆராதனையும், தான தர்மங்களும் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கும். கர்த்தரே என் தேவன் என்ற அசையாத நம்பிக்கை எங்கள இருதயத்தில் இருக்க வேண்டும். எங்கள் வாழ்க்கையில் என்னதான் நடந்தாலும் அல்லது நடக்காவிட்டாலும் இவரே என் தேவன், இவரிலே நான் மனமகிழ்ச்சியாய் இருப்பேன் என்பதே அந்த அசையாத நம்பிக்கை. தன் பிள்ளைகளின் தேவைகளை அறிந்த தேவன், குறித்த நேரத்தில் அவைகளை நேர்த்தியாக செய்து முடிக்கின்றவராக இருக்கின்றார். எனவே, முதலாவதாக எங்கள் இருதயத்தை தேவனுக்கு அர்ப்பணித்து, அவரிலே மன மகிழ்ச்சியாக இருக்கக் கற்றுக் கொள்வோம்.

**சங்கீதம் 37:4**

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

**ஜெபம்**: என் தேவைகளை அறிந்த தேவனே, உம்முடைய நேரத்திலே என் தேவைகள் யாவையும் நீர் சந்திக்கின்றீர் என்ற திட நம்பிக்கையோடு உமக்காக காத்திருக்கும் பெலனை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தந்தையின் குண இயல்புகள்

"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபை யுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்க ட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவரு டைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்கு க்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக் கினார்." இந்த வார்த்தைகள் யாவரு க்கும் பிரியமானவைகள். இந்த வார்த் தைகளின் பலனை நாங்கள் நாள் தோறும் அனுபவித்து வருகின்றோம். இவை எங்கள் பரலோக தந்தையின் குண இயல்புகள். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ள வர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்ப ண்ணுகிறார். நாங்கள் குற்றம் செய்யும் போது, அந்த குற்றத்திற்குரிய தண்டனையை பெறாமல், மன்னிப்பை பெற்றுக் கொள்ளும் போது, எங்கள் பரலோக தந்தையின் இரக்கத்தைக் குறித்து பெரு மகிழ்ச்சிய டைகின்றோம். எப்போதும் நாங்கள் பெற்றுக் கொள்ளும் பிள்ளைக ளாகவே இருந்து விட முடியாது. நாங்கள் பெற்றுக் கொண்ட ஈவை மற்றவர்களுக்கு கொடுப்பவர்களாக மாறிவிட வேண்டும். எங்கள் பரலோக தந்தை உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவராக இருப்பது போல நாங்களும் எங்களுக்கு எதிராக குற்றங்களை செய்கின்றவர்கள் மேல் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்களாக இருக்க வேண்டும். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யு ங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படு த்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள் என்றும், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா "பூரண சற்குணராயிரு க்கிறதுபோல", நீங்களும் "பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்றும் இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 5:45**

**இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக் கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்;**

**ஜெபம்**: பரலோக தந்தையே, உம்முடைய திவ்விய சுபாவங்களினால் உண்டாகும் பலன் என் வாழ்வில் சுபாவமாக மாறும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விளையச் செய்யும் தேவன்

தேவ ஊழியராகிய பவுலின் நாட்களிலே கொரிந்து பட்டணத்திலே இருந்த விசுவாச குடும்பங்களின் மத்தியில் பிரிவினைகள் ஏற்பட்டிருந்தது. அவர்கள் மத்தியிலே பொறாமையும், வாக்குவாதமும், பேதங்களும் இருந்து வந்தது. ஒரு குழுவினர் தாங்கள் தேவ ஊழியராகிய பவுலை சேர்ந்தவர்களளென்றும், வேறு சிலர் தாங்கள் அப்பொல்லோ என்னும் தேவ ஊழியரைச் சேர்ந்தவர்கள் என்றும், இன்னுமொரு சாரார் தாங்கள் கேபாவை (சீமோன் பேதுரு) சேர்ந்தவர்கள் என்றும் பிரிந்திருந்தார்கள். இப்படிப்பட்ட பேதங்கள் ஆவிக்குரியவைகள் அல்ல, மாறாக அவை மாம்சத்திற்குரிய மனுஷ முறைமைகள். "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.

**1 கொரிந்தியர் 3:7**

**அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்.**

மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" என்று தேவ ஊழியராகிய பவுல் கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிளுக்கு தேவ ஞானத்தைப் போதித்தார். அதாவது பரிசுத்த பவுல் என்று இன்று அழைக்கப்படும் இவர், தன்னை சேர்ந்திருப்பதாலோ அல்லது வேறறெந்த பரிசுத்தவான்களை சேர்ந்திருப்பதாலோ பிரயோஜனம் இல்லை ஆனால் கிறிஸ்துவை சார்ந்திருப்பதே தேவையானது என்று வலியுறுத்திக் கூறுகின்றார். பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட நாங்கள், கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை வாழ்ந்த முன்னோர்களை பின்பற்றி செல்லும்படி அவர்களுடைய வாழ்க்கை எங்களுக்கு நற்சாட்சியாக முன்வைக்கப்பட்டிருக்கின்து. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் என்ன செய்தார்கள் என்பதை அறிந்து அதையே நாங்களும் செய்ய வேண் டும். அவர்கள் யாவரும், எஜமானனாகிய இயேசு கிறிஸ்துவைப் பின்ப ற்றினார்கள். கிறிஸ்துவுக்குள் தேவ சித்தத்தை நிறைவேற்றி முடித்தா ர்கள். எனவே, நாங்கள் இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்ற பரிசுத்தவான்களையோ, உயிரோடிருக்கும் நற்சாட்சிகளையோ சார்ந்து வாழாமல், எப்போதும் கிறிஸ்துவை சார்ந்தவர்களாக வாழவேண்டும்.

**ஜெபம்**: பரிசுத்தவான்களாகும்படிக்கு அழைத்த தேவனே, கிறிஸ்துவுக்குள் வெற்றி வாழ்க்கை வாழ்ந்த பரிசுத்தவான்களைப் போல நாங்களும் கிறிஸ்துவை சார்ந்து வாழ பிரசாமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்.

வசதி நிறைந்த இளம் தம்பதியினர், தங்களுக்கு பிறந்த முதலாவது குழந்தையை அதிகமாக அன்பு செய்து, கண்மணியைப் போல காத்து வந்தார்கள். இந்த உலகத்திலே உள்ள எந்த உணவுப் பொருளை கொள்வனவு செய்யவும், உல்லாசமாக உலகத்தை சுற்றிப் பார்க்கவும் வேண்டிய ஐசுவரியம் அவர்களிடம் இருந்தாலும், தங்கள் குழந்தைக்கு, அந்தந்த மாதத்திற்கு என்ன தேவையோ, கொடுக்க வேண்டிய அளவின்படி கொடுத்து வந்தார்கள். கண்ட இடமெல்லாம் தங்கள் குழந்தையை எடுத்துச் செல்ல மாட்டார்கள். குறித்த காலத்திலே மறக்காமல், வைத்திய சோதனைக்காக எடுத்துச் செல்வார்கள். இப்படியாக தங்கள் குழந்தையைக் குறித்து கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆம், பிரியமானவர்களே, நாங்கள் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவையும் படைத்த, சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றோம். அவருக்கு மேற்பட்ட அதிகாரம் எதுவுமில்லை. எல்லாம் அவருக்கு கீழ்பட்டிருந்தாலும், தம்முடைய பிள்ளைகளுடைய தேவை எதுவோ, அதை அவர் குறித்த நேரத்திலே நேர்த்தியாய் செய்து முடிக்கின்றவராயிருக்கின்றார். சுத்தமான பசுப் பால் பருகுவது நல்லது. ஆனால் சுத்தமான பசுப்பால் தாராளமாக எங்களிடம் இருக்கின்றது என்று, அதை மிகையாக ஒரு சிறு பிள்ளைக்கு குடிக்க கொடுக்க முடியுமா? ஒரு பிள்ளையின் தேவையின்படியே பெற்றோர்கள் பாலைக் குடிக்கக் கொடுப்பார்கள் அல்லவா? இனிப்பான பதார்த்தங்கள் மிகவும் சுவையானது. அவற்றை விரும்பாத பிள்ளைகள் யார்? ஆனாலும், பிள்ளையானது விரும்பியபடி இனிப்பான பதார்த்தங்களை தன் இஷ்டப்படி சாப்பிடும்படி எந்த பெற்றோர் விட்டு வைப்பார்கள்? அன்புள்ள பெற்றோர் ஒருவரும் அப்படிச் செய்வதில்லை. எனவே, எங்களை உண்மையாக நேசிக்கின்ற எங்கள் பரம பிதா எங்கள் தேவைகள் என்ன என்று அறிந்திருக்கின்றார். தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கின தேவன், நரைவயது மட்டும் உங்களைத் தாங்கி, ஏந்தி, சுமந்து, தப்புவித்து நடத்திச் செல்வார்.

**ஏசாயா 46:3-4**

**தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கினேன், உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன்,**

**ஜெபம்**: எங்களை நேசிக்கின்ற பரம தந்தையே, என்னுடைய தேவை என்ன என்பதை நீர் அறிந்திருக்கின்றீர். நான் எப்போதும் உம்மிலே பெலன் கொண்டவனா(ளா)ய், வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நித்தியமான ஆசீர்வாதங்கள்

நிரந்தரமற்ற இந்த உலக வாழ்க்கையிலிருந்து, நிலையான நகரமாகிய பரலோகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் எங்களுக்கு, தேவன் தாமே பல ஈவுகளை கொடுத்திருக்கின்றார். அவற்றை சிந்தித்து பாருங்கள். ஜென்ப பாவத்தினால் நித்திய ஆக்கினைக்கு நியமிக்கப்பட்டிருந்த எங்களை நினைவுகூர்ந்தார். தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுவை எங்களுக்காக பலியாக ஒப்புக் கொடுத்தார். பாவம் நிறைந்த உலகத்திலே வாழும் எம்மை சகல சத்தியத்திலும் நடத்தும்படிக்கு, இயேசுவின் நாமத்திலே, சத்திய ஆவியானவரை ஈவாக தந்திருக்கின்றார். மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தியிருக்கின்றார். அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று வெவ்வேறான ஆவியின் வரங்களை தந்திருக்கின்றார். அவர் இப்படியாக கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். காரியம் அப்படியிருக்க, தேவ அழைப்பை பெற்ற ஜனங்கள் இன்னுமாய் முறுமுறுக்கின்றார்கள். அந்த முறுமுறுப்புக்கள் யாவும் இந்த உலகத்தின் காரியங்களாகவே இருக்கின்றது. இந்த உலகத்தை ஜெயம் கொள்ளும்படிக்கு தேவன் பரலோகத்தின் உச்சிதமானவைகளை கொடுத்திருக்க, தேவ அழைப்பை பெற்ற ஜனங்கள், உச்சிதமானவைகளை மறந்து, இந்த உலகத்தின் இச்சைகளுக்கு தங்களை ஒப்புக் கொடுக்கும்படிக்கு முறுமுறுக்கின்றார்கள். பிரியமானவர்களே, தம்முடைய குமாரனையே தந்தவர், அற்பமான தேவைகளை சந்திக்காமல் இருப்பாரோ? நிச்சயமாக அவர் சந்திப்பார். விசுவாசத்தைவிட்டு தளர்ந்து போகாமல், தேவனை நோக்கி அவருக்காக காத்திருங்கள்.

**எபேசியர் 1:3**

**அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகத்தின் பெலவீனமானவைகளை ஜெயம் கொள்ளும்படி பெலமுள்ளவைகளை எங்களுக்கு தந்திருக்கின்றீர் என்பதை உணர்ந்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்

ஒரு தகப்பனானவன், தன் மாதாந்த வருவாயிலே, தன் இரண்டு குமாரர்களுடைய தேவைகளை சந்தித்து வந்தார். அவர்களில் மூத்தவ னோ, என் தகப்பனானவர், எனக்கு நன்மையையே செய்கின்றவர். தன் தேவைகளை எப்படியும் சந்திப்பார் என்று நிச்சயமுள்ளவனாகவும், நன்றியுள்ளவனாகவும் இருந்து வந்தான். இளையவனோ, முறுமுறுப்பதினால் தான் வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணமுடையவனாக இருந்து வந்தான். அப்படியிருந்தும், தகப்பனானவர், தன் இளைய குமாரனுடைய தேவைகளையும் சந்தித்து வந்தார். ஆண்டுகள் கடந்து சென்றபின்பு, இளையவனின் வாழ்க்கையில், தான் முறுமுறுப்பதால் எப்படியாவது எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கின்றேன் என்றிருந்த எண்ணம் சுபாவமாக மாற்றமடைந்து விட்டது. அவன் எப்போதும் தன் தகப்பனானவரை பரீட்சித்து பார்க்கின்றவனாகவே இருந்தான். அதாவது, "மற்றைய அயல்வீட்டிலுள்ள மாணவனிடம், புதிதான சைக்கிள் இருக்கின்றதே, என்னிடமோ கறள்கட்டிய பழைய சைக்கிள் இருக்கின்றதே" "அந்த மனிதனை பாருங்கள், தன் பிள்ளைகளுடைய பிறந்த தினத்தை எவ்வளவு சிறப்பாக நடப்பிக்கின்றான்?" "என்னுடைய நண்பனிடம் ஐந்து சோடி சப்பாத்துக்கள் உண்டு, நான் எங்கு சென்றாலும் ஒன்றையே அணிந்து கொண்டிருக்கின்றேன்" என்று எப்போதும் குறைகளை கூறுபவனாகவே இருந்து வந்தான். அவன் பேரில் அவன் தகப்பனானவர் பிரியமாக இருக்கவில்லை. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கானானுக்கு சென்று கொண்டிருந்த தேவ ஜனங்களுக்கு வேண்டிய ஞான நன்மைகள் யாவையும் தேவனாகிய கர்த்தர் கொடுத்திருந்தார். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்தக் கன்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் எப்போதும் தங்களை நேசிக்கும் பரம தந்தையின் நேசத்திற்குப் பதிலாக, அவரை பரீட்சை பார்க்கும் சுபாவமுள்ளவர்களானார்கள். நாங்கள் அப்படியாக அழிந்து போகாமல், எங்களை நேசிக்கும் பரம தந்தை எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசமுள்ளவர்களாக இருப்போமாக.

**1 கொரிந்தியர் 10:10**

**அவர்களில் சிலர் முறுமுறுத்து,சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள் அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.**

**ஜெபம்**: பராக்கிரமமுள்ள தேவனே, என்னிடத்திலுள்ளவைகள் என்னை போஷிக்கும் என்ற எண்ணத்துடன் வாழாமல், உம்மை நம்பி, ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்யும் உணர்வை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | ஆவணி 12 | 📖 மாலை வாசகம் – 2 கொரி 4:4

# மாசற்ற பிள்ளைகளாகயிருங்கள்

எகிப்த்தின் அடிமைத்தனத்திலிருந்து, வாக்களிகப்பட்ட செழிப்புள்ள கானான் தேசத்திற்கு, மோசே என்னும் தேவ ஊழியர் ஊடாக, தேவ ஜனங்கள் வழிநடத்திக் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்கள் போகும் போது பல அந்நிய ஜனங்ளும் அவர்களோடே சேர்ந்து கொண்டார்கள். "பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான **அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்.** இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக் கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது. (எண் 11:-4-7) என்றார்கள். தூதர்கள் உண்ணும் அப்பமாகிய மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக் கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார். (சங்கீதம் 78:25-26) ஆனாலும் இந்த மன்னாவைத்தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். நாம் வாழும் இந்த உலகம் தேவனை அறியாத அந்நிய ஜனங்களால் நிறைந்திருக்கின்றது. இந்த, கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசியுங்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியாகவே பூமியில் இருந்தோம், தேவ கிருபை பிசன்னமானதினால் இரட்சிப்பை பெற்றுக் கொண்டோம். எனவே, நாங்கள் இந்த சந்ததி அழிந்து போகாதபடிக்கு, அவர்களுடைய மனக் கண்கள் பிரகாசமடையும்படி ஜெபிக்க வேண்டும். ஆனால், பாவ உலகத்திற்கு அடிமைகளாக இருக்கும் அவர்களின் மாம்ச இச்சைகள் எங்களை பற்றிக் கொள்ளா தபடிக்கு **மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக** எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**பிலிப்பியர் 2:15**

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

**ஜெபம்**: பிதாவாகிய தேவனே, உம்மை அறியாத அந்நியர்கள் மத்தியிலே வாழும் நாங்கள் எப்போதும் விழிப்புள்ளவர்களாக வாழும்படிக்கு எங்கள் பிரகாசமுள்ள மனக் கண்களை மங்கிப் போகாதபடிக்கு காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# புதிதும் ஜீவனுமான வாழ்க்கை

பல வருடங்களாக புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாக இருந்த மனிதன், பல பாடுகள் மத்தியிலே, அந்த அடிமைத்தனத்திலிருந்து பெரிதான விடுதலையைப் பெற்றுக் கொண்டான். நீ முன்பு செய்தது போல தொடர்ச்சியாக புகைக்காமல், என்னை போல அவ்வப்போது புகைப்பதில் தவறில்லை என்று அவன் தந்தையார் கூறிக் கொண்டார். அவன் நண்பர்களில் சிலர் இன்னுமாய் புகைத்துக் கொண்டிருந்தார்கள். அதனால் அவன், தன் தந்தையாரையும், நண்பர்களையும் அற்பமாக எண்ணி வெறுத்து தள்ளிவிட வேண்டுமோ? இல்லை! முதலாவதாக, மறு படியும் பழைய பாவ பழக்கத்தைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிலே எந்த சமரசமும் இருக்கக் கூடாது. இரண்டாவதாக, அவர்களும் தன்னைப் போல புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலையாக வேண்டும் என்ற எண்ணமுடையவனாக இருக்க வேண்டும். அவன் தன்னை பழைய அடிமைத்தனத்திலிருந்து காத்துக் கொள்ள வேண்டுமாயின், மறுபடியும் பாவ சோதனையிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும். அதனால், தன் தந்தையையோ, நண்பர்களையோ வெறுத்துத் தள்ளுவது என்பது பொருள் அல்ல. அது போலவே, இயேசு கிறிஸ்து வழியாக மீட்பை பெற முன்பு இருந்த பழைய வாழ்க்கைக்கு நாங்கள் திரும்பாதபடிக்கு எங்கள் இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். "அவர்களோடு சேர்ந்திருந்தால் என்ன" "இதை புசித்தால் என்ன குற்றம்" "அதை ஒரு முறை பார்த்தால் என்ன தவறு" என்று இன்றைய நாட்களிலே தேவனுடைய அழைப்பைப் பெற்ற ஜனங்கள் பற்பல கேள்விகளை கேட்கின்றார்கள். தேவன் தந்த விலை மதிக்க முடியாத இரட்சிப்பை காத்துக் கொள்வது எங்கள் பொறுப்பு. தேவன் தந்த இரட்சிப்பை அற்பமாக எண்ணி, எங்கள் வாழ்க்கையை மறுபடியும் பழைய வாழ்க்கைக்குட்படுத்தும்படி சமரசம் செய்யக் கூடாது. எங்களை நாங்களே திரும்பத் திரும்ப சோதனைக்குட்படுத்தாதபடிக்கு ஞானமுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும்.

**2 பேதுரு 2:20**

கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளால் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படி அழைத்த தேவனே, மறுபடியும் பாவ வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் வழிகளில் நடக்காதபடிக்கு பரிசுத்த வாழ்வு வாழும்படி ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வரங்களில் வித்தியாசங்கள் உண்டு

ஒரு தாயானவள், சுகயீனமுற்ற தன் மகனுக்கு ஏற்பட்ட நோய் சில வாரங்களாக நீடித்திருந்ததால், அருகிலுள்ள மருத்துவ மனைக்கு கொண்டு சென்றாள். மருத்துவ பரிசோதனைக்கு, பின்பு, அவனுக்கு ஏற்பட்ட நோயானது, தொற்று நோய் என்று மருத்துவர்கள் உறுதி செய்தார்கள். மருத்துவ ஆலோசனையின்படி, அவன் தனிமைப்படுத்தப்பட்டான். தாயாரோ, அவன் குடுபத்தாரோ, அல்லது உற்றார் உறவினர்களோ அவன் இருக்கும் இடத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அந்த நோயைப் பற்றியறிந்த மருத்துவ நிபுணர்கள் மட்டுமே அவனிருக்கும் இடத்திற்கு சென்று அவனுக்குரிய சிகிச்சையை வழங்கி வந்தார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள். அந்தத் தாயானவள், தன் பிள்ளையை புறக்கணித்தாளோ?உறவினர் அவனை தள்ளிவிட்டார்களோ? இல்லை! இந்த உலகத்திலே மனிதனுடைய ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டது தன் பிள்ளைக்காக எதையும் செய்ய ஆயத்தமாகவுள்ள தாயானவளினாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை. இவ்வண்ணமாகவே, எங்களில் ஆவிக்குரிய நோய் கொண்டவர்களும் இருக்கின்றார்கள். சில வேளைகளிலே, எங்கள் விருப்பத்தின்படியல்ல, சூழ்நிலைகளின் அடிப்படையில், பாவத்தின் அடிமைத்தனத்திற்குள் சிக்கியிருக்கும் சில மனிதர்களை விட்டு நாங்கள் விலக வேண்டிய நேரங்கள் உண்டு. ஆனால், அவர்கள் மீட்படைய வேண்டும் என்ற சிந்தையுடன், அவர்களுக்காக நாங்கள் தேவனை வேண்டிக் கொள்ள வேண்டும். தொற்று நோய்களுக்கு நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் போல, பாவ அடிமைத்தனத்திலிருக்கும் மனிதர்களை விடுதலையாக்கும்படிக்கு, பிரத்தியேகமான அபிஷேகத்தை பெற்றவர்கள் இருக்கின்றார்கள். ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது. ஞானத்தைப் போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும், விசுவாசமும், குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் வரமும், தீர்க்கதரிசனம் உரைத்தலும், ஆவிகளைப் பகுத்தறிதலும், பற்பல பாஷைகளைப்பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவை களையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தி ன்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்.

**1 கொரிந்தியர் 12:4-5**

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, நீர் என்னிடத்தில் ஒப்புவித்ததை உம்முடைய சித்தப்படி நிறைவேற்றி முடிக்கும்படிக்கு விழிப்புடன் வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| சனி \| ஆவணி 15 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 103:8–13 |
|---|---|

# எல்லாரும் மனந் திரும்பவேண்டும்

கையும் களவுமாக ஒரு குற்றத்திலே அகப்பட்ட மனிதனை பொலிசார் கைது செய்து, நீதிமன்ற வழக்கின் நாள் வரைக்கும் மறியலிலே வைத்திருந்தார்கள். அவன் வாழ்ந்த அயலிலுள்ள மனிதர்கள், "பல நாள் கள்வன் ஒரு நாள் பிடி படுவான்" என்று கூறினார்கள். "செய்த குற்றங்களுக்குரிய தண்டனை பெறும் நாள் வந்துவிட்டது" என்று அவனுடைய உறவினரில் சிலர் கூறிக் கொண்டார்கள். "யாருடைய அறிவுரைக்கு செவி கொடுத்தான்" என்று நண்பர்களில் சிலர் கூறினார்கள். ஒருவேளை இவர்களுடைய கூற்றுக்கள் யாவும் உண்மையுள்ளவைகளாகவும், அவர்கள் அப்படி கூறுவதற்கு சரியான காரணங்களும் இருக்கலாம். ஆனால், நீதிமன்றத்திற்கு சென்றிருந்த அவனுடைய நண்பர்களிலொருவன், தன் நண்பன் செய்த குற்றத்தை மறைத்து மூடாமல், தன் நண்பனுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை வழங்கும்படியாகவும், அவனுக்கு இரக்கம் காட்டும்படியாவும் கண்ணீரோடு, நீதிபதியையும், வழக்கைத் தொடர்ந்த பொலிஸ்தாபனத்தையும் தயவாக வேண்டிக் கொண்டான். தன் நண்பன் அழிந்து போகக்கூடாது என்பதே அவனுடைய ஏக்கமாக இருந்தது. இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். எங்கள் உடன் சகோதர சகோதரிகளிலொருவர் குற்றத்தில் அகப்பட்டால் அதைக் குறித்து எங்கள் மனநிலை எப்படியாக இருக்கும்? அதே குற்றத்தில் நாங்கள் அகப்படிருந்தால் எங்கள் மனநிலை எப்படியாக இருக்கும்? குற்றம் செய்தது உண்மையாக இருக்கலாம். குற்றம் செய்தவன் மனந்திரும்புவானோ இல்லையோ என்பது எங்களுக்கும் தெரியாது. ஒருவேளை இந்த அரச கட்டளைகளின்படி இந்த உலகத்திலே தண்டனைகள் கிடைக்கலாம். ஆனால், குற்றம் செய்தவனுடைய ஆத்துமாவின் முடிவு என்ன? ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்காக இயேசு தம்மைத் தாமே சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுத்தார். ஒருவேளை ஒருவனை அவனது குற்றத்திற்கான தண்டனையிலிருந்த மீட்டுக் கொள்வது எங்கள் பெலனிற்கு அப்பாற்பட்ட காரியமாக இருக்கலாம். ஆனால் அவன் ஆத்துமா பாதாளத்தில் அழிந்து போகாமல் மீட்படையும் வழியை உண்டாக்கும்படி தேவனை நாம் வேண்டிக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாள் வரும்வரைக்கும், இந்த சிந்தையுடன், நாம் ஜெபத்திலே தரித்திருப்போம்.

**2 பேதுரு 3:9**

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந் திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, நான் உம்மை அறியாமல் பாவத்திலிருந்த நாட்களில் அழிந்து போகாதபடிக்கு காத்துக் கொண்டது போல யாவர்மேலும் உம்முடைய கிருபையை காண்பிப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஆவணி 16 | 📖 மாலை வாசகம் – கலாத்தியர் 5:22 – 23

# பரீட்சையின் நாள்

பண்ணையாளர் ஒருவன், தன் பண்ணையின் ஒரு பகுதியிலே பல உயர் ரக அப்பிள் மரங்களை நாட்டி, அவைகளை நன்றாக பராமரித்து வந்தான். வழிப்போக்கர்கள் கண்டு ஆசைப்படும்படியாய் அந்த மரங் கள் யாவும் செழித்து வளர்ந்து ஆரோக்கியமுள்ளதாக காணப்பட்டது. ஆனால், கனி தரும் பருவங்கள் கடந் தும் அந்த மரங்களில் ஒரு அப்பிள் பழ த்தையும் காணவில்லை. அந்த அப்பிள் மரங்கள் தன் கனியாகிய அப்பிளை கொடுக்காவிட்டால் அதனால் உண்டா கும் பலன் அற்பமே. இதற்கொத்ததாக வே எங்கள் ஒவ்வொருவருடைய வாழ் வின் பலனும் அளக்கப்படும். எங்கள் வாழ்வில் திரண்ட ஆஸ்தியும், உயர்ந்த கல்வியும், சமுக அந்தஸ்தும் இருக்க லாம். கிழமைதோறும் நாங்கள் ஆலய த்திற்கு சென்று வரலாம். இந்த உலகத் தின் அளவுகோலின்படி வாழ் க்கை சிறப்பாக ஓடிக் கொண்டிருக்கலாம். ஆனால், எங்கள் வாழ்வில் நாங்கள் கொடுக்கும் கனியினாலே நாம் யார் என்பதை அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்ல, எங்களைச் சூழ இருக்கும் மற்றவர்களும் நாங்கள் யார் என்பதை அறிந்து கொள்வா ர்கள். பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு படிப்பதற்கு வேண்டிய யாவற்றையும் கொடுத்திருக்கின்ற பெற்றோர், தங்கள் பிள்ளைகள் பாட சாலையில் பாடங்களை நன்றாக படிக்கின்றார்களா என்பதை எப்படி அறிந்து கொள்வார்கள்? பரீட்சையின் முடிவுகள் வரும்போது அதை அறிந்து கொள்வார்கள். முதல் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் தேவ னாகிய கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியவில்லை என்று எப்படி அறியப்பட்டது? சோதனையின் நாளிலே அவர்கள் கீழ்படியாமற் போ னார்கள் என்று அறியப்பட்டது. யாவும் நலமாயும் சௌக்கியமாயும் இருக்கும் போது, நான் என் மனைவியை நேசிக்கின்றேன் என்று கூறிக் கொள்வது ஒரு கணவனுக்கு இலகுவான காரியம். அதுபோலவே நல மும் சௌக்கியமுமான நாட்களிலே நான் என் கணவனுக்கு கீழ்ப்படிந்தி ருக்கின்றேன் என்று கூறுவது மனைவிக்கு இலகுவான காரியம். ஆனால் வாழ்வில் பரீட்சையின் நாட்கள் வரும் போதே தங்கள் நிலை மை என்ன என்பதை கணவனும், மனைவியும், அவர்களை சூழ உள்ள வர்களும் அறிந்து கொள்வார்கள். எனவே, எங்கள் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையிலே தேவன் விரும்பும் கனிகளை நாம் கொடுக்க வேண்டும்.

**மத்தேயு 7:16**

**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா?**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, என் வாழ்விலே, உம்முடைய வார்த்தையின்படி, நீர் விரும்பும் கனியை கொடுக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# பந்தையப்பொருளை பெற்றுக் கொள்ளும்படி

குறித்த பட்டணத்தின் நவீன கட்டிடமொன்றிலே, இயங்கி வந்த ஒரு உதைபந்தாட்ட கழகத்தில், அதன் அநேக உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இருந்தார்கள். உதைபந்தாட்ட வீரர்களின் பயிற்சிக்கு தேவையான இட வசதிகள் யாவும் தாராளமாக இருந்தது. சற்றுத் தொலைவிலே இருக்கும் ஒரு சிறிய ஊர் ஒன்றிலே, எளிமையான வாழ்க்கை தரத்தையுடைய விளையாட்டு வீரர்களை கொண்ட உதைபந்தாட்ட குழு இயங்கி வந்தது. பட்டணத்திலே தங்கள் சொந்த கட்டிடம் மற்றும் மைதானத்திலே இயங்கி வந்த உதைபந்தாட்ட குழுவைப் போல, சிறிய ஊரிலே இருந்த குழுவினருக்கு அதிக வசதிகள் இல்லை. ஆனாலும், இந்த இரண்டு அணியும் ஒருவரை ஒருவர் எதிர்த்து போட்டியிடும் போது, அந்த ஊரிலே இயங்கி வந்த எளிமையான குழுவினர், எளிதாக வெற்றி பெற்று விடுவார்கள். அவர்கள் பிரபல்யமானவர்களல்லர். அவர்களுக்கு அநேக ஆதரவாளர்கள் கிடையாது. ஆனாலும் அவர்கள் உதைபந்தாட்ட விளையாட்டிலே சிறந்து விளங்கினார்கள். சற்று இந்த சம்பவத்தை வைத்து எங்கள் ஆவிக்குரிய வாழ்வை ஆராய்ந்து பார்ப்போம். தேவனாகிய கர்த்தர்தாமே நாங்கள் இந்த உலகத்திலே வெற்றி வாழ்க்கை வாழும்படிக்கு பல ஈவுகளை கொடுத்திருக்கின்றார். ஆவியின் வரங்க ளை பகர்ந்து கொடுத்திருக்கின்றார். சில சபை ஐக்கியங்கள் பெரிதான நவீன தொழிநுட்ப கருவிகளுள்ள கட்டிடங்களிலே இயங்கி வருகின்றது. இவை யாவும் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? தேவன் எங்களை ஆசீர்வதித்திருக்கின்றார் என்று கூறுவதற்காகவா? இல்லை! பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாகவே இவைகள் யாவும் ஈவாக கொடுக்க ப்பட்டிருக்கின்றது. அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்களின் வாழ்க்கையிலே ஆவியின் கனி நிறைவாக இருக்கும். எனவே, தேவன் கொடுத்திருக்கும் இரட்சிப்பு மேன்மையானது. அதற்காக தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுவை எங்களுக்காக தந்தார். அவர் வழியாக தூய ஆவியை தந்திருக்கின்றார். உன்னதத்திலுள்ள சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கின்றார். இவைகளை பெற்றிருக்கின்ற நாம், முற்றிலும், தேறினவர்களானோம் என்ற எண்ணம் கொள்ளாமல், கிறிஸ்துவுக்குள் நமது பரம இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லுவோம்.

**பிலிப்பியர் 3:14**

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.**

**ஜெபம்**: ஈடு இணையற்ற தேவனே, ஒப்பற்ற, விலை மதிக்க முடியாத உம்முடைய திருக்குமாரனின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நான், அந்த மீட்பை அற்பமாக எண்ணாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய ஆளுகை

ஜனநாயகம் என்னும் அரசாங்கத்தின் வடிவமைப்பை நாங்கள் யாவரும் அறிந்திருக்கின்றோம். பொதுவாக, தேர்தல் வழியாக மக்கள், அரசாங்க பிரதிநிதிகளை தெரிந்தெடுகின்றார்கள். அந்த அமைப்பிலே ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் இருக்கும். அரச தீர்மானங்களும், சட்டதிட்ட ங்களும் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படும். இத்தகைய அமைப்புக்கள் இன்று சபைகளிலேயும் அமுல்பபடுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது, பெரும்பான்மை வாக்குகளினாலே செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பெரும்பான்மை யானோர் தேவ சித்தத்தை செய்வார்கள் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அப்படியாக தேவ சித்தம் நிறை வேற்றப்பட்டால் நல்லது. இன்றைய தியானம் ஜனநாயகத்தை குறித்ததல்ல, தேவனுடைய ஆளுகையை குறித்தது. தேவனுடைய ஆளுகையிலே எதிர்கட்சிகள் இல்லை. பிதாவாகிய தேவனுடைய சித்தம் பரலோகத்திலே சம்பூரணமாக நடப்பிக்கப்படுகின்றது. அது போல இந்தப் பூமியிலே, என்னுடைய வாழ்க்கையிலே, குடும்பத்திலே, சபையிலே, தேசத்திலே பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தம் நிறைவேற்றப்பட வேண்டும். கொரிந்து பட்டணத்திலே இருந்த சபையில் வரங்கள் யாவும் நிறைவாக கொடுக்கப்பட்டிருந்தது. தேவ உபதேசங்களை நன்றாக அறிந்திருந்தார்கள். (1 கொரி 1:5-7). ஆனால், அவர்கள் மத்தியிலே வாக்குவாதங்களும் பிரிவினைகளும் இருந்தது. சபைக்குள்ளே பல குழுக்கள் இயங்கி வந்தது. கர்த்தர் ஒருவரே. அவருடைய ஆவியானவர் எங்களிலே வாசம் செய்தால், நாங்கள் இசைந்த ஆத்துமாக்களாய் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ளுகின்றவர்களாக இருப்போம். எதிராளியாகிய சத்துருவானவன், கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போனான் என்று கர்த்தராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னார். அந்தக் களைகள் சத்துருவினுடையவைகள். அவை தேவனால் உண்டானவைகள் அல்ல. இதை மையமாக வைத்து சபையையோ அல்லது மற்றவர்களையோ நியாயந்தீர்க்காமல், நாங்கள் அந்த களைகளாக மாறிவிடாமலும், தேவசித்தம் நிறைவேறுவதற்கு தடையான எதிர்கட்சியாக மாறிவிடாமலும், எம் வாழ்வில் தேவ சித்தமானது நிறைவேறுவதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டும்.

**பிலிப்பியர் 2:2**

**நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.**

**ஜெபம்:** ஆளுகை செய்யும் தேவனே, நீர் ஒருவரே எல்லாவற்றையும் அறிந்தவர். உம்முடைய திருச்சித்தம் நிறைவேறுவதற்கு தடையாக நான் போய்விடாதபடிக்கு என் ஆத்துமாவை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேண்டப்படாத இன்னல்கள் ஏன்?

வாடகை வீட்டில் வசித்து வந்த ஒரு தம்பதியினர், தங்களுக்கு சொந்தமான ஒரு வீட்டை வாங்குவதற்காக அடைமான வங்கி கடனை பெற்றுக் கொள்ளும்படிக்கு, ஒரு அடைமான முகவரை சந்திக்க சென்றிருந்தார்கள். அவர்களது வருடாந்த வருமானத்தையும், செலவுகளையும் மீளாய்வு செய்த பின்பு, வங்கியாளர் தன் அறிக்கையை அவர்களிடம் சமர்ப்பித்தார். அதன்படிக்கு, அவர்களின் தற்போதைய வருமானத்தின் அடிப்படையில், அவர்கள் குறிப்பிட்ட வீட்டை வாங்குவார்களாக இருந்தால், பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்று வங்கியாளர் ஆலோசனை கூறினார். "எங்கள் அயலிலுள்ள அந்த மனிதனைப் பாருங்கள், அவன் எங்களைவிட அதிகமாக உழைப்பதில்லை, ஆனால் அவன் வசிக்கும் வீட்டைப் பாருங்கள். அவன் தன் அடைமானக் கடனை கட்ட முடியும் என்றால், நாங்கள் ஏன் கட்ட முடியாது" என்று வீடு திரும்பும் போது, மனைவி தன் கணவனிடம் கூறிக் கொண்டாள். இந்த சம்பவத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். வங்கியாளர் இவர்களுக்கு கூறிய ஆலோசனை நன்மையானது. அடைமானத்தை பெறுகின்றவர்களுக்கும், அதை கொடுக்கும் வங்கிக்கும் ஏற்புடைய ஆலோசனை. ஆனால், மற்றவனுடைய நிலையைப் பார்த்து நல்ல ஆலோசனைகளை தள்ளிவிட்டால், வாழ்வில் பெரும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடலாம். வேதம் சத்தியம்! தேவன் விருதாவாய் வேத வார்த்தைகளை விளம்பவில்லை. எடுத்துக் காட்டாக, ஒரு உதவி ஊழியக்காரன் எப்படி இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவாக கூறுகின்றது. (1 தீமோ 3:1-10). மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும் குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். இந்த ஆலோசனை, உதவி ஊழியனின் தகுதி மட்டுமல்ல, இன்னும் அதிகமாக, சபைக்கும், ஊழியத்திற்கும், விசுவாசிகளுக்கும், உதவி ஊழியனுக்கும், அவன் குடும்பத்திற்கும், யாவரினதும் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கும் நன்மையான ஆலோசனை. என்னைவிட தகுதியற்றவன் செய்கின்றான், நான் செய்தால் என்ன என்ற அடிப்படையில் நாங்களும் செய்ய ஆரம்பித்தால், பெரும் நோவுகள், பிரிவினைகள் உண்டாகக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். இவ்வண்ணமாக, வேதத்தின் ஆலோசனைகளை நாங்கள் தள்ளிவிடும் போது, எங்கள் வாழ்க்கையில் பல வேண்டப்படாத இன்னல்களுக்கு முகங் கொடுக்க வேண்டியதாயிருக்கும்.

**சங்கீதம் 119:142**

**உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்.**

**ஜெபம்**: வாக்குரைத்த தேவனே, உம்முடைய வார்த்தைகள் சத்தியமானவைகள் என்பதை எப்போதும் உணர்ந்தவனா(ளா)க, அதன்படி வாழும்படிக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள்

சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் அவை யாவும் அந்த சரீரத்தின் நலனுக்காக ஒன்றாக இசைந்து செயற்படுகின்றது. ஆனால், அந்நிய சரீரத்தின் வேறொரு அவயவத்தை எங்கள் சரீரத்தோடு இணைத்துக் கொண்டால் அதன் செயற்பாடு எங்கள் சரீரத்திற்கு பாதகமாக மாறிவிடும். நவீன உலகத்திலே, சரீரத்தின் அவயவங்கள் சிலவற்றை மாற்று சத்திர சிகிச்சை செய்கின்றார்கள். ஆனால் அதற்கு ஒரு முறை உண்டு. அதுபோலவே அந்நிய அவயவங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இணைந்து கொள்ளலாம். ஆனால் அதற்கு படிமுறைகள் உண்டு. அதாவது, ஒரு மனிதன் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக இருக்க விரும்பினால், அவன் இயேசு கிறிஸ்துவே மீட்பர் என்று விசுவாசிக்க வேண்டும். அதன்பொருட்டு, தன் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு, மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள், பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். (மத்தேயு 28:19, மாற்கு 16:16, 1 பேதுரு 3:21). இது தேவன் நியமித்த ஒழுங்கு. தேவன் விருதாவாய் பேசுவதில்லை. இதற்கு கீழ்படிபவன், தன்னை கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி தன்னை அர்ப்பணிக்கின்றான் என்பதை உறுதி செய்துகொள்கின்றான். அப்படி, தன்னை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்காதவன், கிறிஸ்துவின் ஆவியை உடையவனல்ல. அவன் கிறிஸ்துவுக்கு அந்நியனாக இருப்பான். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:9, 1 கொரி 12:3). எனவே, அந்நிய அவயவங்களை உங்கள் சொந்த சரீரத்தோடு இணைப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். எடுத்துக்காட்டாக, கிறிஸ்துவையுடையவனாயிராத ஒருவனை, சபையில் அங்கத்தவனாக்குவதற்காக அவனை சபையின் உதவி ஊழியங்களுக்காக ஏற்படுத்தும் போது அதனால் பின்விளைவுகள் உண்டு. கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் கிறிஸ்துவின் சிந்தையையுடையவனல்ல. அவன் தன் மாம்சத்திற்குட்பட்டவனாயிருப்பான். குறித்த காலத்திலே அவன் கனிகள் வெளிப்படும். நாங்களோ கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாக விழிப்புள்ளவர்காக வாழக்கடவோம்.

**கலாத்தியர் 3:27**

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

**ஜெபம்**: பரலோக தந்தையே, என் வாழ்வின் கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவனாக உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்றி முடிக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஆவணி 21 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 5:8

# யாருடன் ஐக்கியப்பட்டிருக்கின்றேன்?

ஒரு மனிதன், தன் அயலிலே, தனது வீட்டிற்கு எதிர்பக்கமாயுள்ள வீட்டிற்கு, புதிதாக வந்திருக்கும் குடும்பமானது மிகவும் ஒழுக்கமுள்ளவர்கள் என பெருமிதமாக கூறிக்கொண்டான். நாளடைவிலே, இவனுடைய மகனானவன், முன்வீட்டிற்கு சென்று அந்த குடும்பத்திலுள்ள சிறு பையனுடன் சேர்ந்து விளையாடுவது வழக்கமாயிற்று. கிரிகெட், உதைபந்தாட்டம் என்று பல வெளியரங்கு விளையாட்டு களை விளையாடி வந்தார்கள். சில கிழமைகளுக்கு பின், முன் வீட்டில் வசிக்கும் அந்த சிறு பையன், தன்னிடம் இருக்கும் கம்யூட்டர் விளையாட்டுக்களை அந்த மனிதனுடைய மகனுக்கும் அறிமுகம் செய்தான். துப்பாக்கிச் சண்டைகளும், வன்முறைகளும் நிறைந்த கம்யூட்டர் விளையாட்டை முதல் முறையாக கண்டதும் இவன் சற்று தயக்கமடைந்து, தான் அதை விளையாட விரும்பவில்லை என்றும், தனது பெற்றோர் அதை அனுமதிக்க மாட்டார்கள் என்றும் கூறனான்.. மற்றவனோ, இது வெறும் விளையாட்டு, மிகவும் சுவாரசியமானது, என்னுடைய பெற்றோர், என்னுடைய கடந்த பிறந்த தினத்தன்று இதை வாங்கிக் கொடுத்தார்கள். சற்று அமர்ந்திருந்து நான் விளையாடுவதை பார் என்றான். விளையாட்டை பார்த்துக் கொண்டிருந்த மகனானவனுக்கோ அதின் மேல் ஆசை உண்டாகிவிட்டது. சில நாட்களுக்கு பின் இருவரும் அந்த கம்யூட்டர் விளையாட்டை எந்த தயக்கமும் இன்றி, பரவசத்துடன் விளையாடி வந்தார்கள். இந்த சம்பவத்திற்கு ஒத்ததாகவே, பெரியவர்களாகிய எங்களது வாழ்க்கையும் இருக்கின்றது. எங்கள் வாழ்வில் ஆகாதது என்றும், யோக்கியமற்றது என்றும் தள்ளப்பட்டிருக்கும் சில காரியங்கள், நாளடைவில் வழக்கமாதொன்றாக மாறி விடுகின்றது. பொருளாசை ஒரு பொருட்டல்ல என்று வாழும் ஒரு குடும்பத்துடன் நாங்கள் ஐக்கியபடும் போது, நாளடைவில் பொருளாசையின் பின்விளைவுகளின் உணர்வு எங்கள் இருதயத்தைவிட்டு அகன்று போய்விடும். இவ்வண்ணமாகவே தேவனுடைய ஜனங்கள், தங்கள் மத்தியிலுள்ள அந்நிய ஜனங்களால், தேவன் கொடு த்த கட்டளைகளை மீறி, பரிசுத்த வாழ்வை கெடுத்துக் கொண்டார்கள். நாங்கள் மற்றய மனிதர்கள் மேல் எங்கள் தேவ அன்பை காண்பித்து, நீடிய பொறுமையுள்ளவர்களாக அவர்களுடைய இரட்சிப்புக்காக ஜெபிக்க வேண்டும். ஆனால், நாங்கள் யாருடன் ஐக்கியமாயிருக்கின்றோம் என்பதைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் எப்போதும் விழிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

**2 கொரி 6:15**

அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, நீர் எனக்கு தந்திருக்கின்ற பிரகாசமுள்ள மனக் கண்களை நான் குருடுபடுத்தாதபடிக்கு, உம் வார்த்தையின்படி தூய வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய வீட்டார்

முற்காலங்களிலே நாங்கள்? கிறிஸ்துவைச் சேராதவர்களும், தேவ ஜனங்களுடைய சுதந்திரத்திற்கு புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தோம். நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்டியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக்கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த எங்களை தேவன் உயிர்ப்பித்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது எங்களால் உண்டானதல்ல, இது தேவனு டைய ஈவு.

**எபேசியர் 2:19**

பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. முன்னே தூரமாயிருந்த நாங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானோம். இன்று, எங்கள் உறவுகள், பந்துள்ளோர்கள், நண்பர்கள் நாங்கள் முற் காலத்திலே இருந்தது போல கிறிஸ்துவுக்கு அந்நியராயிருக்கின் றார்கள். அவர்களை நானோ அல்லது நீங்களோ இரட்சிக்கக்கூடுமோ? எங்களுடைய கிரியைகள் அவர்களின் பாவங்களை மன்னிக்குமோ? இல்லை! ஆனால் நீங்கள் அவர்களை நேசித்தால், நற்செய்தியைக் கூறுங்கள். தேவ கிருபையானது அவர்கள் வாழ்வில் வெளிப்படும்படிக்கு அவர்களுக்காக ஊக்கமாக ஜெபியுங்கள். இரட்சிப்பு தேவனுடையது. ஆனால், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக நாங்கள் ஒரு அந்நிய ஐக்கியத்தை ஏற்படுத்துவோமாக இருந்தால். நாங்கள் கிறிஸ்துவை அறிய முன்பு எங்கள் மனதும் மாம்சமும் விரும்பினதை செய்தது போல, நாங்கள் விரும்புகின்றவர்களை தேவன் இரட்சிக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாயிருப்போம். ஒருவரும் மேன்மை பாராட்டதபடிக்கு இரட்சிப்பானது தேவ கிருபையினால் உண்டாகின்றது. உங்கள் வாழ்வில் தேவன் தகர்த்துப்போட்ட பாவத்திற்கு இட்டுச்செல்லும் பாலத்தை (Bridge) நீங்கள் மறுபடியும் கட்டாதிருங்கள். வேத வார்த்தைகள் விருதா வாய் எழுதப்படவில்லை. ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, கிறிஸ்துவின் மேல், இசைவாய் இணைக்கப்பட்டு, பரிசுத்த ஆலயமாக வாழ வேண்டும்.

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படி அழைத்த தேவனே, மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின்மேல் ஊன்றக் கட்டப்பட்டு, பரிசுத்த ஆலயமாக, உம்முடைய வீட்டாராக திகழும்படிக்கு எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சூழ்நிலைகளை நிதானித்து அறியுங்கள்

எங்களுடைய ஐக்கியம் கிறிஸ்துவோடும், கிறிஸ்துவைச் சார்ந்தவர்களோடும் இருக்க வேண்டும் என்பதைக் குறித்து கடந்த தினங்களிலே தியானித்து வந்தோம். கிறிஸ்துவோடும், கிறிஸ்துவைச் சார்ந்தவர்களோடும் ஐக்கியமாக இருக்கின்றோம் என்பதை நாங்கள் எப்படி ஆராய்ந்து அறிந்து கொள்வது? இயேசுவின் இரத்தத்தினாலே பாவமறக் கழுவப்பட்டு, அருமையான மீட்பைப் பெற்றுக் கொண்டோம். அதாவது இரட்சண்ணியத்தின் சந்தோஷத்தை எங்களுக்கு கொடுத்து சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை எங்களுக்கு கொடுத்திருக்கின்றார். அவர் எங்கள் துணையாளராக எங்களோடு இருந்து, எங்களுக்குள்ளே வாசம் செய்து, எங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துகின்றவராயிருக்கின்றார். நாங்கள் நடக்க வேண்டிய சத்தியமானது, பரிசுத்த வேதாகமம் வழியாக எங்களுக்கு போதிக்கப்படுகின்றது. அந்த வார்த்தைகளை விளங்கிக் கொள்ளும்படியாக துணையாளராகிய தூய ஆவியானவர் எங்களுக்கு உதவி செய்கின்றார், ஊக்குவிக்கிறார். அவர் எங்களுக்கு சுத்த மனட்சாட்சியை தந்து, இருளான உலகத்திலே, பாவ இருள் எங்களை மேற்கொள்ளாதபடிக்கு தெளிவாக பார்க்கும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்திருக்கின்றார். எனவே இன்று நீங்கள் பரி-சுத்த வேதாகமத்தை, தனித்திருந்து வாசித்து, தியானம் செய்து, அதன்படிக்கு நாளுக்கு நாள் உள்ளான மனுஷனில் வளர்ச்சியடைகின்றவர்களாக இருந்தால், நீங்கள் தனித்திருந்து தேவனுடைய பாதத்திலே ஊக்கமாக ஜெபிக்கின்றவர்களாக இருப்பீர்கள். இவை இரண்டும் உங்கள் வாழ்வில் இருக்கும் போது, நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் நிலைத்திருப்பவர்களாக இருப்பீர்கள். தூய ஆவியானவரை துக்கப்படு த்தாதிருப்பீர்கள். அதனால், கிறிஸ்துவையும், கிறிஸ்துவினுடையவர்க ளையும் நிதானித்து அறிவீர்கள். ஆனால், தனித்திருந்து வேதத்தை வாசித்து, தியானிக்கின்ற பழக்கம் உங்களில் இல்லாதிருக்குமென்றால், காரிருள் நிறைந்த உலகத்திலே, பாதை தெளிவாக தெரியாதவர்களாக, பல தவறான முடிவுகளை உங்கள் வாழ்வில் எடுக்கின்றவர்களாயிருப்பீர்கள். தனித்திருந்து வேதம் வாசிப்பதற்கும், தனித்திருந்து ஜெபிப்பதற்கும் மாற்றீடான காரியங்கள் ஒன்றுமில்லை. வேதத்தை தினமும் வாசியுங்கள், தனித்திருந்து ஜெபியுங்கள், தேவ ஆவியானவர்தாமே சகல சத்தியத்தி லும் உங்களை வழிநடத்திச் செல்வார்.

**1 கொரிந்தியர் 2:15**

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான் ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

**ஜெபம்:** ஞானம் நிறைந்த தேவனே, இந்த உலகத்தின் போக்கோடு நான் ஐக்கியப்படாதபடிக்கு, அவைகளை நிதானித்து அறியும்படிக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மிகுந்த கனி தரும் வாழ்க்கை

தேவனுடைய வசனம் எங்கள் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கின்றது. அவருடைய வார்த்தைகள் அநேகமாயிரும் பொன் வெள்ளிகளைப் பார்க்கிலும் அருமையானது. தேவ வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறது. வேத வார்த்தைகள், எங்களை தேறினவர்களாக்கி, எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாக மாற்றுகின்றது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், தேவனுடைய வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை. தேவனுடைய வார்த்தை எங்கள் ஆவிக்குரிய உணவு. ஆத்துமாவின் ஔஷதம். இப்படியாக தேவனுடைய வார்த்தையானது எங்கள் வெற்றி வாழ்க்கைக்கு இன்றியமையா ததாயிருக்கின்றது. கர்த்தருடைய வசனம், அவருடைய சாட்சிகள், பிரமாணங்கள், கற்பனைகள், கட்டளைகள் யாவும் எங்களுக்கு ஆரோக்கியத்தை தருகின்றது. கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். *(சங் 119:1)*, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். *(சங் 1:2)*, அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். *(சங் 112:1)*, கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். *(சங் 128:1)*. பிரியமான சகோதர சகோதரிகளே, விரும்பினால் வாசிக்கலாம், விருப்பமில்லையென்றால் விட்டுவிடலாம் என்று வேதத்தை நாங்கள் புறக்கணித்து வாழ முடியாது. இந்த உலகத்தின் ஞானம் அழிவுக்குரியது. ஆனால் வேதம் தரும் ஞானம் தெய்வீகமானது. அது பரத்திலிருந்து வருகின்ற நித்திய ஞானம். ஆயுதங்கள் இல்லாமல் யுத்த களத்தில் நிற்பவனைக் குறித்து என்ன சொல்வீர்கள். அதே போலவே, வேத வார்த்தைகள் உங்களில் நிலைத்திருக்காவிட்டால், ஆயுதம் இல்லாமல் ஆவிக்குரிய யுத்த களத்தில் நிற்கின்ற ஞானமற்ற பிள்ளைகளைப் போல இருப்போம். எனவே வேதத்தை வாசியுங்கள், அதிலே நிலைத்திருங்கள், அப்போது மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள். பிதா உங்களில் மகிமைப்படுவார்.

**யோவான் 15:7**

**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**ஜெபம்:** வாழ்வு தரும் வசனத்தை உடையவரே, உம்முடைய வார்த்தையினாலே நான் பக்திவிருத்தியடைந்து, உமது வழியிலே என் காலடிகள் ஸ்திரப்படும்படி என்னை வழிநடத்திச் செல்வீராகஇரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெப வாழ்வு ஜெய வாழ்வு

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தி னாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப் பொழுது, எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானம் உங்கள் இருதய ங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். (பிலிப்பியர் 4:6-7). எந்தச்சமயத்திலும் சகலவிதமான வேண் டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவி யினாலே ஜெபம்பண்ணி, அதன்பொ ருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசியர் 6:18). இடை விடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய் யுங்கள் அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறி த்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (1 தெச 5:17-18). உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள். (லூக்கா 6:18). ஒருவ ருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:16). இப்படியாக ஜெபத்தின் அவசியத்தைக் குறித்த அநேக வார்த்தைகளை வேதத்தில் காணலாம். இவை தேவனுடைய வார்த்தைகள். அதை அவர் விருதாவாக விளம்பவில்லை. எனவே, வெற்றி வாழ்க்கைக்கு ஜெபம் இன்றியமையாதது. ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, தேவனு டைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ் நானம் பெற்றார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அதுபோலவே, சபையாரோடு, சிறு குழுக்களோடு ஐக்கியமுள்ளவர்களாக நாங்கள் ஜெபிக்க வேண்டும். அதே வேளையிலே நாங்கள் தனித்திருந்து தேவனுடைய பாதத்திலே ஜெபிக்க வேண்டும். இவ்வண்ணமாக எங்கள் மீட்பராகிய இயேசுவும் தனித்திருந்து பரம பிதாவிடம் ஜெபம் பண்ணினார். எங்கள் முன்னோ டிகளாகிய பரிசுத்தவான்கள் யாவரும், ராஜ மாளிகையிலிருந்தாலும், அடிக்கப்பட்டு சிறையிலே போடப்பட்டாலும், கல்லெறியப்பட்டு மரிக்கும் தறுவாயிலும் தேவனை நோக்கி ஜெபித்தார்கள். விசுவாசத்திலே நிலையாய் தரித்திருந்தார்கள். இந்த உலகத்தை ஜெயித்தார்கள். அவர்கள் போல நாங்களும் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம். இந்த உலகத்தை ஜெயம் கொள்வோம். ஜெபமே ஜெயம்.

**ரோமர் 12:12**

**ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.**

**ஜெபம்**: உன்னதமாக தேவனே, இந்த உலகத்தை ஜெயிக்கும்படிக்கு, நாங்கள் உம்மோடு உறவாடத்தக்கதாக நீர் கொடுத்திருக்கும் பெரியதான சிலாக்கித்திற்காக உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறே ன் ஆமேன்.

# கொடுக்கப்பட்டிருக்கும் நேரம்

புதிதாக இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு அநேக நண்பர்கள் இருந் தார்கள். அவர்கள் இன்னும் இரட்சகராகிய இயேசுவின் அன்பை அறி யாததால், அவர்கள் யாவரும் தனக்கு விடுதலை தந்த இயேசுவை அறிய வேண்டும். பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலையடைய வேண் டும் என்று ஆவலாக இருந்தான். அதனால் அவர்களோடு போக்கும் வரத்துமாக இருந்து வந்தான். பழைய நண்பர்களின் விசேஷ தினங்களில் அவ ர்களை சந்தித்து வந்தான். அவ்வப் போது அவர்களோடு சேர்ந்து கிரிகெட், உதை பந்தாட்டம் போன்ற விளையாட் டுகளை விளையாடி வந்தான். நாள டைவிலே தன் பழைய நண்பர்களோடு அநேக நேரத்தை செலவிட்டான். இவன் பாவமான எந்தக் காரியமும் செய்யவில்லை. இவனுடைய எண்ண மும் நோக்கமும் நன்மையானது. ஆனால், அவனுடைய வேத வாசிப்பு, மற்றும் ஜெப நேரங்கள் நண்பர்களால் வஞ்சகமாக திருடப்படுவதை உணராதிருந்தான். பழைய நண்பர்களை மீட்கும்படி அதிக நேரத்தை அவர்களோடு செலவிடு வதைப் பார்க்கிலும், அவர்களுடைய மீட்புக்காக அதிக நேரத்தை மீட்பராகிய இயேசுவோடு செலவிடுவதே அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் அதிக பிரயோஜனத்தை கொடுக்கும் என்பதை அவன் உணராதிருந்தான். கடந்த நாட்கள் நாங்கள் தியானித்தது போல, எங்கள் பிரயாசங்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க வேண்டும். எங்கள் சொந்த கிரியைகளினால் உண்டாகும் பிரயோஜனம் அற்பமே. அந்த மனிதன் ''நான் என்ன செய்ய சித்தமாயிருக்கின்றீர்'' என்று இயேசுவிடம் கேட்டால், அவன் நண்பர்களை குறித்த காரியத்தை கர்த்தர் அவனுக்கு நிச்சயமாக வெளிப்படுத்துவார். எங்கள் வாழ்க்கையில் நேரங்கள் எப்படியாக செலவிடப்படுகின்றது என்பதைக் குறித்து நாங்கள் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். சங்கீதக்காரன் கூறியிருப்ப தைப் போல "சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வ ளவு இன்பமானவைகள்! வேறிடத்திலே, ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன். என்னும் வாஞ்சை எங்களில் எப்போதும் பெருக வேண்டும்.

**சங்கீதம் 84:10**

ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளவும், நாட்கள் பொல்லாதவைகளானதால் கால த்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபி க்கிறேன் ஆமேன்.

# ஆவிக்குரிய ஆகாரம்

பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டிருக்கும் மாணவனொருவன், தன் பாடங்களிலே மிகவும் கருத்துடன் கற்று வந்தான். அத்தோடு வார இறுதிநாட்களிலே, பகுதிநேரமாக வேலையும் செய்து, தன் குடும்பத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ளவனாக இருந்தான். இப்படியாக பல மாதங்கள் சென்றபின்பு, அவனுடைய சரீரத்திலே பெலவீனங்கள் உண்டாக ஆரம்பித்தது. எடுக்க வேண்டிய ஆகாரத்தை நேரத்திற்கு முறைப்படி எடுக்காததாலும், உடலிற்கு வேண்டிய தேகப் பயிற்சியை எடுக்காததாலும், உடலுக்கு தேவையான இளைப்பாறு தல் இல்லாததாலும் அவன் சீக்கிரமாக வைத்தியரை சந்திக்க வேண்டியதாயிற்று. எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நற்கிரியைகள், செயற்திட்டங்கள், ஐக்கிய ஒன்று கூடல்கள் யாவும் நல்லது. ஆனால், எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆரோக்கியத்தைப் பேண, ஆவிக்குரிய போஜனமாகிய வேத வசனத்தை நாங்கள் தினமும் நேரம் தவறாது உட்கொள்ள வேண்டும். உள்ளான மனிதன் நாளுக்கு நாள் கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட வேண்டும். கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்பட வேண்டும். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொண்டவர்களாய் எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். தேவன் தரும் ஓய்வு நேரத்தில், இளைப்பாற வேண்டும். இவைகளை செய்யத் தவறும் போது, எங்கள் ஆவிக்குரிய போராட்டத்திலே பின்னடைவை சந்திக்க நேரிடும். எனவே எந்த நற்கிரியைகளை செய்தாலும், எப்படிப்பட்ட நன்மை தரும் செயற்திட்டங்களைச் செய்தாலும், வேத வார்த்தையை தியானிப்பதற்குரிய நேரத்தையும் ஜெபிக்கும் நேரத்தையும் தவறவிடாதிருங்கள். ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்விற்கு இவை இன்றியமையாதது.

**1 பேதுரு 5:8**

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

**ஜெபம்**: உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, என் நிலையை வாழ்வின் நிலைமையை நீர் நன்றாய் அறிந்திருக்கின்றீர். உமக்காக காத்திருக்கின்றேன், நீர் என்னை விடுவித்து காத்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உதவி செய்யும் ஆவியானவர்

இந்த உலகத்திலே நாங்கள் உயிர் வாழும்வரை தேவ பிள்ளைளுக்கு உபத்திரவங்களும், சவால்களும், போராட்டங்களும் உண்டு. அந்தப்பட்டியலில், தினமும் வேத வார்த்தைகளை வாசிப்பதும், ஜெபிப்பதும் பலருடைய வாழ்க்கையிலே இடம் பெறுகின்றது. அதாவது, நாளாந்தம் வேதத்தை வாசிப்பதும் ஜெபிப்பதும் ஒரு சிலருக்கு சவாலாக மாறிவிடுகின்றது. "நான் தினமும் வேதத்தை வாசிப்பதுமில்லை, ஜெபிப்பதுமில்லை, எப்படி அவைகளை செய்வது?"என்று கேட்பதும், வைத்தியசாலைக்கு சென்றேன், வைத்தியர் நல்ல மருந்தைக் கொடுத்திருக்கின்றார். ஆனால் அதை எப்படி உட்கொள்வது? என்பதற்கு ஒத்திருக்கும். இது ஒரு கடினமான செயல் அல்ல. ஆனால் கடினமானது போல தோன்றுகின்றது. எங்கள் வாழ்க்கையில் இருக்கும் சில பழக்கவழக்கங்கள் மாற்றப்பட வேண்டும். அதை செய்வதற்குரிய பெலனை கொடுக்க தேவ ஆவியானவர் ஆயத்தமுள்ளவராகவே இருக்கின்றார். "நான் இருக்கின்ற வண்ணமாகவே எப்படி தேவ சமுகத்திற்கு போவது? நான் என் வாழ்வில் சில வேண்டப்படாத பழக்கங்களை விட்ட பின்பு, ஜெபிக்க ஆரம்பிப்பேன்" என்று சிலர் சொல்லிக் கொள்வார்கள். அப்படியல்ல, நீங்கள் உங்களை பலவந்தம் பண்ணிக் கொண்டு, அறைவீட்டை பூட்டிக் கொண்டு, தினமும் சில நிமிடங்கள் ஜெபிக்க ஆரம்பியுங்கள். அதிக வசனிப்புக்கள் தேவையில்லை. மற்றவர்கள் பேசும் அடுக்கு மொழிகள் அவசியமில்லை. உங்களை நேசிக்கும் தந்தையோடு நீங்கள் பேசுவது போல, உங்கள் மனதைத் திறந்து உங்கள் நிலையை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். எங்கள் பாவங்களுக்காக பாவமறியாத பரிசுத்தராகிய இயேசுதாமே பலர் முன்னிலையிலே, அவமானத்தையும் நிந்தைகளையும், வெட்கத்தையும், பாடுகளையும் சகித்தார். அறைவீட்டை பூட்டிக் கொண்டு எங்களை நேசிக்கும் இயேசுவோடு பேசுவது வெட்கமாக தோன்றுகின்றதா? ஒரு நேரத்தை குறிப்பிட்டு, இன்றே ஜெபிக்க ஆரம்பியுங்கள். ஒருவேளை எழுந்திருக்க முடியாமல் வியாதி ஏற்பட்டால், அந்நாட்களிலே, உங்கள் படுக்கையிலிருந்து இயேசுவை நோக்கிப் பாருங்கள். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். கற்றுத் தரும் ஆவியாவனர் எப்படி நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்பதை உங்களுக்கு கற்றுத் தந்து நடத்துவார்.

**ரோமர் 8:26**

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்.**

**ஜெபம்:** வழிநடத்தும் தேவனே, என் வாழ்க்கையிலே நான் மாற வேண்டிய இடங்கள் உண்டு. தினமும் நான் உம்முடைய பாதத்தில் தரித்திருந்து ஜெபிக்கும்படி நான் தீர்மானித்திருக்கின்றேன். எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனம் தளர்ந்து போகாதிருங்கள்

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக்குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான் அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள் அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன் நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறியிருக்கின்றார். அநீதியுள்ளவர்கள், அன்பில்லாதவர்கள், கடின இருதயமுள்ள வர்கள் அப்படி செய்யும் போது, நீதிபரராகிய தேவன் நீதி செய்யாதிருப்பாரோ? நிச்சயமாக நீதி செய்வார். இரக்கம் நிறைந்த தேவன் இரங்காதிருப்பாரோ? நிச்சயமாக இரங்குவார். பூலோகத்திலே இருக்கின்ற எங்கள் பெற்றோர் நன்மையான ஈவுகளை பிள்ளைகளுக்கு கொடுக்க அறிந்திருக்கும் போது, அன்புள்ள பரம பிதா நன்மையானவைகளை ஒரு போதும் மறைத்து வைப்பதில்லை. எனவே மனம் தளராமலும், சோர்ந்து போகாமலும் இருந்து, என்ன நடந்தாலும் என் தேவனில் நான் விசுவாசமாயிருப்பேன் என்று உறுதியாய் நிலைத்திருக்க வேண் டும்.

**லூக்கா 18:7**

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?

**ஜெபம்:** வாக்குரைத்த தேவனே, நீர் உம்முடைய பிள்ளைகளை நேசிக்கின்றீர் என்பதை எப்போதும் உணர்ந்தவனா(ளா)ய், உம்முடைய நேரத்திற்காக பொறுமையாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையின் நாட்கள்

ஒரு சமயம் கர்த்தராகிய இயேசு தாமே பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான். பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும் ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார். பிரியமானவர்களே, கிருபையின் நாட்களிலே வாழ்ந்து வருகின்றோம். படைத்த தேவனை, அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக அவர் தமது குமாரனுடைய ஆவியை எங்கள் இருதயங்களில் அனுப்பினார். குமாரனாகிய இயேசுவிலிருந்த மெய்யான ஒளியை எங்கள் இருதயங்களில் பிரகாசித்தார். பாவ இருள் நிறைந்த உலகிலே, பாதை தெரியாமல் மாண்டு போகாதபடிக்கு, அந்த தேவ ஒளி எங்களில் இன்று பிரகாசிக்கின்றது. இது எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பகற் காலம். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவர் எப்போதும் ஒளியாகவே இருக்கின்றார். அவருடைய ஆளுகை முடிவடைவதில்லை. அவர் எப்பொழுதும் கிரியைகளை நடப்பிக்க வல்லவர். ஆனால், இந்த உலகிலே கிருபையின் நாட்கள் முடிவடைந்து போகும் போது **ஒரு மனுஷனும்** கிரியை செய்ய முடியாத இராக்காலம் மிக அருகில் வருகின்றதாய் இருக்கின்றது. எனவே எங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களையும் சந்தர்ப்பங்களையும் நாங்கள் பிரயோஜனப்படுத்திக் கொள்வோம். எப்படியெனில், முதலாவதாக, கிறிஸ்துவின் நாளிலே, நாங்கள் கறைதிரை அற்றவர்களாக அவருக்கு முன்பாக நிற்கும்படிக்கு, இந்த நாட்களிலே நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்த வேண்டும். எப்போதும் நாம் ஆயத்தமுள்ளவர்களாக வாழ் ந்து கொண்டு, கர்த்தர் கொடுத்த பெலத்தின்படி, கர்த்தருடைய கிருபையின் நாட்களை குறித்த நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இந்த உலகமும் அதன் மாயையிலும் ஒருவரும் சிக்கி அழிந்து விடாதபடிக்கு, பகற்காலமாகிய இந்த கிருபையின் நாட்களை ஞானமுள்ளவர்களாய் பயன்படுத்துங்கள்.

**யோவான் 9:5**

**நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.**

**ஜெபம்**: அன்புள்ள பரலோக தந்தையே, நீர் எங்களுக்கு தந்திருக்கும் இரட்சிப்பை அற்பமாக எண்ணாதபடிக்கு, கருத்தோடு உணர்வுள்ள வாழ்க்கை வாழும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்மைகளை அனுப்பி வைப்பார்

**அப்போஸ்தலர் 10:4**

**உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.**

இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங் களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந் தான். பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணிநேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங் கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன, என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான். அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான். எப்படியாக தேவனுடைய தூதனானவர், இஸ்ரவேலன் அல்லாத ஒரு புறஜாதி மனிதனிடம் அனுப்பப்பட்டார் என்று பாருங்கள். எங்களை நேசிக்கும் தேவன் எங்களோடு பல வழிகளிலே உறவாடுகின்றார். நாங்கள் வேத வார்த்தைகளை வாசிக்கும் போது உணர்வடையச் செய்கின்றார். சக விசுவாசிகள் வழியாக பேசுகின்றார். சபை போதகர் வழியாக நாங்கள் செய்ய வேண்டியவைகளை போதிக்கின்றார். சொப்பனங்கள், தரிசனங்கள் வழியாக இடைப்படுகின்றார். அது மட்டுமல்ல, அவர் விண்ணிலிருந்து தேவ தூதர்களை தினமும் அனுப்புகின்றார். இவை நாங்கள் அறியாத, எங்களை சூழ இருக்கும் ஞான நன்மைகளாயிருக்கின்றன. உன் வழிகளி லெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங் 91:11). அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 18:10). எனவே திடன் கொள்ளுங்கள். உங்கள் ஜெபங்களும் நற்கிரியைகளும் வீண் போவதில்லை. அவைகளை தேவன் அறிந்திருக்கின்றார். அவர் குறித்த காலத்திலே பெரிதான நன்மைகளை அனுப்பி வைப்பார்.

**ஜெபம்**: உம்முடைய தூதர்களை அனுப்பி எம்மை காக்கும் தெய்வமே, உம்மு டைய அன்பின் ஆழத்தை நான் மறந்து போகாதாபடிக்கு, உணர்வற்ற இருதயத்தை எனக்கு தூரப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

**முகவரி ADDRESS:**

**நகரம் CITY:**

**மாநிலம் PROVINCE:**

**தபால் குறியீடு POSTAL CODE:**

## மேலதிக விபரங்கள்

- [ ] **whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்
- [ ] **Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________

**மின் அஞ்சல் E-MAIL:**

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca